Registered as a news paper.

பக்கங்கள்: பதின்னான்கு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 07 (29.03.2004) திங்கட்கிழமை இதழ்:180

நாளை ஆரம்பமாகின்றது

திருமறைக் கலா மன்றம்
தயாரித்து வழங்கும்

காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)

மார்ச் 30,31, ஏப்ரல் 1,3,4, - 2004
(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு)

மன்ற அரங்கில் - மாலை 7.00 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் (சி-2335) - திருமறைக் கலா மன்றம்

### தேர்தல் வன்முறைகள் குறித்து

## ஐரோப்பிய ஒன்றியத்தினுடைய கண்காணிப்பாளர் கண்டனம்!

தற்போது இடம்பெற்றுவரும் தேர்தல் வன்முறைகளை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், குறிப்பாக- நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் போன்றோர் தாக்கப்பட்டது தொடர்பாக தாம் வன்மையான கண்டனங்களை தெரிவிப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோன் குஷ்நகன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ்.நகரில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

வேட்பாளர்கள் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி ஜனநாயக ரீதியாக தேர்தல் (14 ஆம் பக்கம் பார்க்க)



பத்திரிகையாளர் மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள்.

### கருணா குழுவினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

# மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு ஜோசப் பரராஜசிங்கம் கோரிக்கை



(மட்டக்களப்பு)

**கருணா குழுவினரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை அடுத்து தான் வீட்டுக்காவலில் இருப்பதுபோல் உள்ளதாகவும், எனவே தனக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்கவேண்டும் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.**

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் ஜோசப் பரராஜசிங்கம் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு, வெளிப்படையாகத் தெரிவித்த ஆதரவை அடுத்து கருணா குழுவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று பரராஜசிங்கம் தெரிவித்த கருத்தினால், ஆத்திரமடைந்த கருணா குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளியேறுமாறும் இல்லையெனில் கடும் விளைவுகளை சந்திக்கவேண்டிவரும் எனவும், ஜோசப் பரராஜசிங்கத்தை எச்சரித்திருந்தனர்.

கருணா குழுவினரின் அச்சுறுத்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பரராஜசிங்கம், தொலைபேசி மூலம் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் (14 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தலுக்கு முன்னரே

## வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல சோமவன்ச திட்டமிட்டுள்ளார்!

**ஆங்கில வார இதழ் தகவல்**

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னரே நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

இந்தத் தகவலை ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றில் நீண்டகாலமாக தங்கியிருந்த சோமவன்ச பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதையடுத்து நாடு திரும்பினார்.

பல்வேறு இடங்களுக்கும் சென்று பிரசாரத்தில் ஈடுபடும் இவர், பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும் என்று புலனாய்வுத் தகவல்கள் வெளியானதையடுத்து நாட்டைவிட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாகத் (14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறைச்சாலையில் கைதி ஒருவர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மரணமடைந்தவர் 60 வயதையுடைய புலோலி கிழக்கைச் சேர்ந்த யோசப் ஸ்ராலின் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஒரு சில வாரங்களுக்கு முன்பு கசிப்பு உறபத்தி தொடர்பாக யாழ். சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட இவருக்கு ஆஸ்த்துமா நோய் முன்பு இருந்ததாகத் கூறப்படுகிறது.

மரணமடைந்தவர்களின் உறவினர்களுக்கு இவரது மரணம் குறித்து அறிவிக்கப்பட்டு, நேற்று மாலை வரை யாழ்.போதனா வைத்தியசாலை சடலம் வைக்கப்பட்ட போதும், இது வரை உறவினர் எவரும் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பலத்த பாதுகாப்புடன் அரச அதிபருக்கு சிகிச்சை

இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான மோனகுருசாமி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக, அவசர சிகிச்சைப்பிரிவின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜெசிங்க தெரிவித்தார்.

வைத்திய அறிக்கையின்படி அவரது மண்டையோட்டுக்கு கீழ் காணப்பட்ட துப்பாக்கிச் சன்னத்தின் 3 துகள்களை அகற்றும் வகையில் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாக (14 ஆம் பக்கம் பார்க்க)

## மீன் முள்ளு தொண்டையில் சிக்கி குடும்பப் பெண் பரிதாப மரணம்!

மீன்முள்ளு தொண்டையில் சிக்கியதால், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 45 வயதான தங்கராசா மரியறோஸ் என்பவரே மரணமடைந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது -

குறித்த பெண் நேற்று முன்தினம் மதிய உணவு உட்கொண்டிருந்தவேளை, மீன் முள்ளு அவரது தொண்டையில் சிக்கியது. இதனையடுத்து இந்தப் பெண் சிகிச்சை பெறுவதற்காக யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (14 ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறை பகுதி மக்களால்

## வல்லைவெளி வரை விரட்டப்பட்ட சுயேட்சைக் குழு வேட்பாளர்கள்

பருத்தித்துறை நகரில் பிரசாரத்தில் ஈடுபட்ட சுயேட்சைக் குழு வேட்பாளர்கள் வல்லைவெளி வரை மக்களால் விரட்டப்பட்டனர்.

நேற்று மாலை 3.30 மணியளவில் பருத்தித்துறை நகரில் சுயேட்சைக்குழு வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது - அந்தப்பகுதியில் திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் தேர்தல் பிரசாரத்தை நடாத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் அங்கிருந்து வெளியேறுமாறு எச்சரித்தனர்.

இதன்போது - இவர்களுக்கு மெய்ப்பாதுகாவலர்களாக வந்த பொலிஸார் மக்கள் காட்டிய எதிர்ப்பையடுத்து, இவர்களை வாகனத்தில் இருந்து இறங்கவிடாது தடுத்ததுடன் வாகனத்தில் பயணம் செய்தவாறே பிரசாரத்தில் ஈடுபடுமாறு கோரினர். (14 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்



சொலமன் சூசைப்பிள்ளை சிறில்



தேச விடுதலைக் களங்களில் நின்றவன்.
தமிழர் எழுச்சியே மூச்சாகக் கொண்டவன்.

தேசத் தொண்டரைத் தெரிந்து வாக்களிக்கவேண்டிய தேர்தல் இது

- தேசிய எழுச்சிப் பேரவை, தீவகக் கோட்டம்

(சி-2357)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004



தந்தை செல்வாவின் தமிழரசுப் பாசறை
மாணவன் மாவை,
தமிழ்த் தேசியத்தின் சுதந்திரத்திற்கும்
தமிழ் மக்களின் விடுதலைக்கும்
ஓயாது தலைசாயாது விலை போகாது
40 ஆண்டுகளுக்கும் மேலாய்
போராடி வருபவர் மாவை,
அஹிம்சைப் போராட்டமானாலும்
ஆயுதப் போராட்டமானாலும்
மக்கள் விடுதலைக்காக எந்தக்
களத்திலும் நின்று போராடும்
திடம் கொண்ட போராளி மாவை

**மாவை**
**சோ.சேனாதிராஜா**

**மாவையின் வெற்றி தமிழ் மக்களின் இலட்சிய வெற்றி**

**அவருக்கே எங்கள் வாக்கு**

காங்கேசன் துறைத்
தொகுதி மக்கள்.

(சி-2354)

X 12



# கொள்கைக்கான தேர்தல் – 2004

**எமது தலைமை தமிழீழ விடுதலைப் புலிகள்; எமது இலட்சியம் தமிழீழ தாயகம்**



ஒடுக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகளை
தேவைகளை உலகறியச் செய்ய

பெண்களின் திறமைகளை வெளிக்கொணர
தொழில் உலகில் சாதனையாளர்களாக மாற்ற,

யாழ் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
ஒரேயொரு பெண் வேட்பாளராக
பொங்குதமிழின் ஒரு ஏற்பாட்டாளர்
பத்மினி சிதம்பரநாதன்
துணிவோடு வருகிறார்

தாய் நிலத்துக்கும் விடுதலை
தமிழ் பெண்களுக்கும் விடுதலை

நேற்றுவரை மின்னாது முழங்காது
தேசத்தின் விடுதலைக்கு வலுச்சேர்த்தவர்

இலங்கை தமிழரசுக் கட்சி

X 7

# பத்மினி சிதம்பரநாதன்

பாண்டியன்தாழ்வு வாழ் மக்கள் சி/2353

### தேசிய அரசாங்கம் அமைக்க

# ஜாதிக ஹெல உறுமய உந்துசக்தியாக இருக்கும்!

## உடுவே தம்மலோக தேரோ கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய உந்துசக்தியாக இருக்கும்

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளரான வண.உடுவே தம்மலோக தேரோ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜாதிக ஹெல உறுமய நாட்டில் புதிது புதிதாக உருவாக்கப்படுகின்ற மதுபான நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

அத்துடன், சில அரசியற் கட்சிகளின் பத்திரிகைகள் ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர்களான பௌத்த பிக்குகளை தரக்குறைவான முறையில் எழுதி, அவர்கள் மீது சேறுபூசும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனையும் அரசியற்கட்சி ஒன்றின் துணையுடன் இயங்கும் பத்திரிகையாளர் ஒருவர், நான் வண.சோமதேரோவைப் போல பிரபலமாக விரும்புவதாக எழுதியுள்ளார்.

அடுத்ததாக வாரப்பத்திரிகை ஒன்று நான் வண.சோமதேரோவை விட மிகப்பிரபலமாகுவதற்கு முயற்சி செய்வதாகக் கூறுகின்றது. அத்துடன், இந்தப் பத்திரிகை தம்மலோக தேரோ - வண.சோமதேரோவின் தாயை விமர்சித்ததாக எழுதியிருந்தது.

ஆனால், இந்தச்செய்தியை சோமதேரோவின் தாயார் மறுத்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

### லேக் ஹவுஸ் ஊழியர்கள்

# சந்திரிகா கூட்டணிக்கு எதிராக கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டம்!

லேக் ஹவுஸ் ஊடகங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமக்கு சாதகமான முறையில் பயன்படுத்துவதை எதிர்த்து அங்கு பணிபுரியும் எண்பது வீதமான பணியாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க உறுப்பினர் ஒருவர் - ஊடகத்துறையை ஜனாதிபதி பொறுப்பேற்ற நாள்முதல் இன்றுவரை லேக் ஹவுஸ் நிறுவனம் 54 மில்லியன் ரூபாவை இழந்துள்ளது.

அத்துடன் இந்த லேக் ஹவுஸ் பத்திரிகைகள் அனைத்தும் உண்மையாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசார பத்திரிகைகளாக மாறிவிட்டன. அத்துடன் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் 35 வாகனங்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

எனவே இந்த பத்திரிகை நிறுவனங்களை குறித்த அரசியற் கட்சி ஒன்று சீரழிப்பதை அனுமதிக்கமுடியாது எனத் தெரிவித்த அவர்- இந்த ஆர்ப்பாட்டம் அரசியல் சார்ந்தது அல்ல எனவும் தெரிவித்தார்.

# அரசாங்க ஊடகங்களின் மீதான அழுத்தங்களை நிறுத்தவேண்டும்!

## சர்வதேச பத்திரிகையாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அரச ஊடகங்களில் தேவையில்லாமல் தலையிட்டு அவற்றிற்கு அழுத்தம் கொடுப்பதனையும், அங்கு பணிபுரியும் பணியாளர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதனையும் - ஜனாதிபதியும், பிரதமரும் உடன் கைவிடவேண்டும்.

இவ்வாறு சர்வதேச பத்திரிகையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச ரீதியில் சுமார் ஐந்து லட்சம் பத்திரிகையாளர்களை உறுப்பினர்களாகக்கொண்ட இந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு வாரங்கள் இருக்கும் நிலையில் தேவையற்ற விதத்தில் அரச ஊடகங்கள் மீது அரசியற் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

இதற்கு உதாரணமாக 'சண்டே ஒப்சேவரின்' பிரதம ஆசிரியரைக் குறிப்பிடலாம். இவர் தேர்தல் காலங்களில் ஊடகங்கள் நடுநிலையாக நடந்துகொள்ளவேண்டுமென எழுதிய ஆசிரியர் தலையங்கத்திற்காக பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது அரசியல் சார்ந்த நடவடிக்கைதான் எனவும், இதன்மூலம் அரசாங்கம் தனது தேர்தல் பிரசாரத்திற்கு ஊடகங்களைப் பயன்படுத்துவது தெரிகின்றதெனவும், இந்தச் சங்கத்தின் தலைவர் கிறிஸ்தோபர் வறின் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# ராகல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இடமாற்றம்!

## சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

ராகல பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரியான அஜித் தர்மபாலவை உடனடியாக வேறு இடத்துக்கு மாற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சி.எ.எதிரிசிங்க பொலிஸ் பொறுப்பதிகாரி அஜித் தர்மபால தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுதிய மூன்றுபக்க கடிதத்தின் பின்னரேயே ஜனாதிபதி இந்த உத்தரவை பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவுக்கு விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தனது உத்தரவில் - பொலிஸ் பொறுப்பதிகாரியான அஜித் தர்மபால ராகல பிரதேசத்தில் அரசியற்கட்சி ஒன்றுக்கு சார்பாக நடந்துகொண்டுள்ளார். அத்துடன் இவர் கடந்த ஆறு வருடமாக ராகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருகிறார்.

எனவே, இவரை உடனடியாக வேறு இடம் மாற்றிவிட்டு, அதற்குப் பதிலாக தகுதிவாய்ந்த ஒருவரை அவரது இடத்திற்கு நியமிக்கவும். இவ்வாறு அவரை இடமாற்றுவதன் மூலம் ராகல பிரதேச மக்கள் சுதந்திரமாகவும், நீதியான முறையிலும் வாக்களிப்பார்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# உள்நாட்டு வரிவிலக்கு சட்டமூலம்; அரசியலமைப்புக்கு முரணானது!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது

(கொழும்பு)

உள்நாட்டு வரிவிலக்கு சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இந்தத் தீர்ப்பை நேற்றுமுன்தினம் அறிவித்ததாக ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வருமான வரிவிலக்கு சட்டமூலம், சட்டத்திற்குப் புறம்பானதா என்பது குறித்து விசாரித்து முடிவை அறிவிக்கும்படி உயர்நீதிமன்றத்திடம் ஜனாதிபதி சந்திரிகா கேட்டுக்கொண்டதற்கமைய இதனை ஆராய்ந்த 5 நீதியரசர்களைக்கொண்ட குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

உள்நாட்டு வருமான வரிவிலக்கு சட்டமூலம் அரசியல் யாப்பின் 12 ஆவது பிரிவிற்கு முற்றிலும் முரணானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு அமைய ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சட்டத்தின் வரப்பிரசாதங்களும், மன்னிப்பும் கிடைப்பதால் அது நாட்டின் சட்டத்தை மீறும் செயலென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது பாரிய மோசடிகளுக்கு வழிவகுக்கும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

# வன்னித் தேர்தல் ; வவுனியாவில் கூட்டம்

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மக்கள் வாக்களிப்பது தொடர்பான இறுதித் தீர்மானக் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியா அரச செயலகத்தில் நடைபெற்றது.

வவுனியா அரசாங்க அதிபரும் வன்னித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான கே.கணேஸ் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது தேர்தலில் வாக்களிக்கச் செலலும் மக்கள் மீது பரிசோதனைக் கெடுபிடிகளோ அன்றி பதிவுகள் எதுவும் இன்றி நேரடியாகச் சென்று வாக்களிக்க முடியும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கே.கணேஸ் தெரிவித்தார்.

அத்துடன் ஓமந்தை, உயிலங்குளம் மடு வீதி ஆகியவற்றில் அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் மொத்தமாக 80819 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர் எனவும் -

முல்லை மாவட்டத்திற்காக 49 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும், வவுனியா வடக்குப் பகுதிக்காக 2 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும், ஓமந்தைக்கான ஒரு வாக்களிப்பு நிலையமும், மன்னார் மேற்கு மாந்தைக்கான 12 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும், மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான 4 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமல்டா சுகுமார், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம், விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி சிசிர விஜேசூரிய மற்றும் வன்னி மாவட்ட வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# தபால்மூல வாக்களிப்பு திகதியை நீடிக்க இணக்கம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் தபால்மூலம் வாக்களிக்கமுடியாமற்போன அரச அலுவலர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தபால் மூலம் வாக்களிப்பதற்கான திகதி எதிர்வரும் இரண்டாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்தி முன்னணி தலைமையிலான அரசியற் கட்சிகள் சேர்ந்து நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து இந்த திகதியை நீடிப்பது தொடர்பாக கலந்துரையாடியபோது இந்த திகதியை நீடிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் இணங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கில் பணியாற்றும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு ஏன் வாக்குச் சீட்டுக்கள் இன்னமும் உரியமுறையில் சென்றடையவில்லையென தேர்தல் ஆணையாளரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான பிரதிநிதிகள் கேட்டனர்.

அதற்குத் தேர்தல் ஆணையாளர் -வாக்குச்சீட்டுக்கள் உரியவர்களின் விலாசத்திற்கே சேர்க்கப்பட்டதாகவும், ஆனால் தபால் திணைக்களம் இந்த விலாசங்களில் உள்ள குறித்த சிலருக்கு வாக்குச்சீட்டுக்களை அனுப்புவதற்குத் தவறிவிட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த வாக்குச்சீட்டுக்களை உடனடியாக உரியவர்களுக்கு எவ்வளவு விரைவாக அனுப்பமுடியுமோ அவ்வளவு விரைவாக அனுப்புமாறு தான் தபால் திணைக்களத்திற்கு அறிவிததுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# ஹமாஸ் தலைவரின் படுகொலையை கண்டித்து அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

இஸ்ரேல் படையினரால் ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத்தலைவர் ஷேக் யாசீன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி ஜும்மா பள்ளிவாசல்முன் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தை கல்முனை இக்பால் சனசமூக நிலையத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. அத்துடன் இச்சம்பவத்தைக் கண்டித்து ஐ.நா சபைக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்று கல்முனைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

(107)

# தபால் வாக்கு முறைகேட்டில் கல்விப் பணிப்பாளருக்கு தொடர்பு

## ஒழுக்காற்று நடவடிக்கைக்கு சிபாரிசு

(கொழும்பு)

தபால்மூல வாக்களிப்பு முறையில் இடம்பெற்ற முறைகேடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஆசிரியர் ஒருவரின் தபால் வாக்கு இன்னொருவரால் பயன்படுத்தப்பட்ட மோசடிச் சம்பவமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

தம்புடடியகம மகாவித்தியாலய ஆசிரியை ஒருவருக்கே இந்தக்கதி ஏற்பட்டுள்ளது.

தம்புட்டியகம பிராந்திய கல்வி அலுவலகத்தில் வாக்களிக்கச்சென்ற ஆசிரியையிடம் அவரது வாக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருப்பாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தேர்தல் முறைகேடு குறித்த விசாரணைகளை உதவித் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டார். குறித்த கல்வி அலுவலகத்தில் கடமைபுரிந்த அதிகாரியும் இந்த வாக்களிப்பு மோசடிக்குக் காரணமாக இருந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த அதிகாரி மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த் திஸநாயக்கவிடம் உதவித் தேர்தல் ஆணையாளர் பரிந்துரை செய்துள்ளார்.

இந்த முறைகேட்டுக்குக் காரணமான நபர் தம்புட்டியகம கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்கெதிரான முதல் டெஸ்ட்; இந்திய அணி வலுவான நிலையில்!

(முல்தான்)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 356 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.



பாகிஸ்தான் முல்தான் நகரில் நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் பதில் தலைவர் ராகுல் ராவிட் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

ஆகாஷ் சோப்ராவும், வீரேந்தர் ஷேவாக்கும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இவர்கள் இருவரும் நிதானமாக நின்று பாகிஸ்தான் வீரர்களின் பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொண்டனர்.

இந்திய அணி 160 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆகாஷ் சோப்ரா ஆட்டமிழந்தார். அவர் 121 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றார்.



அடுத்து களமிறங்கிய ராகுல் டிராவிட்டும் 6 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

நிதானமாகவும், பந்துகளை வீணடிக்காமலும் விளையாடிக் கொண்டிருந்த வீரேந்தர் ஷேவாக்குடன் சச்சின் டெண்டுல்கர் இணைந்து இந்திய அணியை பலமான நிலைக்கு இட்டுச் சென்றனர்.

சச்சின் டெண்டுல்கர் மிகவும் மெதுவாக ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டிருந்த போது - ஷேவாக் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து சதத்தைப் பூர்த்தி செய்ததுடன், இரட்டைச் சதத்தையும் பெற்றார்.



90 ஓவர்கள் நிறைவில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இந்திய அணி 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 356 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஷேவாக் 30 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 228 ஓட்டங்களைக் குவித்தார். சச்சின் டெண்டுல்கர் 144 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் பந்துவீச்சாளாகள் இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் திணறிக் கொண்டிருந்தனர்.

முகமட் சமி 18 ஓவர்கள் பந்துவீசி 54 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டை வீழ்த்தினார். சக்லைன் முஷ்டாக் 23 ஓவர்கள் பந்துவீசி 123 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டை வீழ்த்தினார்.

# தென்னாபிரிக்காவுடனான 3 ஆவது டெஸ்ட் நியூஸிலாந்து அணி நெருக்கடி நிலையில்!

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் வெலிங்ரனில் நடைபெறும் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று - நியூஸிலாந்து தனது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று நெருக்கடி நிலையில் உள்ளது.

முன்னதாக தென்னாபிரிக்க அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 316 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த அணி சார்பாக ஸ்மித் 47, கிப்ஸ் 77, றுடோல்ப் ஆட்டமிழக்காமல் 93, வான் ஜார்ஸ்வெல்ட் 59, நிக்கிபோஜி 25 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை, தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கைக்குரிய தூணான கலிஸ், பொலக் மற்றும் நெல் மூவரும் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் கிறிஸ் மார்ட்டின் 5 (இத்துடன் இந்த தொடரில் தொடர்ந்து இவர் மூன்றாவது முறையாக 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்) கிறிஸ் கெயின்ஸ் 4, ஜேக்கப் ஓரம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது இரண்டாவது இனிங்ஸை ஆடத்தொடங்கிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி- அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பப்ஸ் ஓட்டமெதுவும் பெறாமலும், மற்றைய வீரர்கள் அனைவரும் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்த தனாலும், நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது நியூஸிலாந்து 5 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் தற்போது 109 ஓட்டங்களால் மட்டும் நேற்றுவரை நியூஸிலாந்து முன்னிலை வகிக்கின்றது.

இந்த அணி சார்பாக றிச்சட்ஸன் 37, சின்கிளெயர் 21, ஓட்டங்களையும், ஆட்டமிழக்காமல் ஸ்ரைஸ் 41, மற்றும் கெய்ன்ஸ் 7 ஓட்டங்களுடனும் உள்ளனர்.

பந்துவீச்சில் பொலக், நிக்கி போஜி இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், நெல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

# இந்திய-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் சமநிலையில் வெற்றிவாய்ப்புள்ளது

## ராகுல் ராவிட் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

'இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் போட்டி தொடரில் இரு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு சமநிலையிலுள்ளது' என்று ராவிட் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நேற்றுத் தொடங்கியது.

இந்த டெஸ்ட் தொடரில் முதல் போட்டி மிகவும் முக்கியமானதாகும். முதல் டெஸ்டை விட்டு பின்னர் வெற்றியை பிடிப்பது என்பது எளிதான காரியமல்ல.

டெஸ்ட் தொடரில் இரு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு சமநிலையில் உள்ளது. கங்கூலி ஆடாதது இழப்பாகும். இவ்வாறு ராவிட் கூறினார்.

பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் கூறுகையில் - டெஸ்ட் போட்டித் தொடரை வெல்வது எங்கள் குறிக்கோள், முதல் டெஸ்டில் கங்கூலி ஆடாததை எங்களுக்கு சாதகமாக்குவோம். டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற முல்தான் மக்கள் அனைவரும் பிரார்த்தனை செய்யும்படி வேண்டுகிறேன் என்றார்.

# விளையாட்டு

# எனக்கு எல்லாமே கிரிக்கெட்தான்; சச்சின் டெண்டுல்கர் பேட்டி!

எனக்கு எல்லாமே கிரிக்கெட்தான் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார். முல்தானில் நிருபர்களுக்கு அளித்த சிறப்புப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விவியன் றிச்சர்ட்ஸ்தான் எனக்கு முன்மாதிரி. அவர் சிறந்த துடுப்பாட்ட வீரர். நான் எனது வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். சிறுவனாக இருக்கும்போது கிரிக்கெட் வீரனாக ஆகவேண்டும் என்று விரும்பினேன். நாட்டுக்காக நீண்டகாலம் ஆடவேண்டும் என்பதே எனது விருப்பம். மற்றபடி சாத்னை இலக்கு எதுவும் கிடையாது. நெருக்கடி, பதற்றம் இல்லாமல் ஆடுவதால் நீண்டகாலம் தொய்வின்றி விளையாட முடிகிறது. முதலில் நான் இவ்வளவு ஓட்டங்களைக் குவிப்பேன் என்று நினைத்துக்கூட பர்க்கவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் முக்கியமானது. பழைய அனுபவங்களைத் திரும்ப ஞாபகப்படுத்த முடியும். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் எதிர்பார்ப்பு அதிகம் ஏற்படுவதால் நெருக்கடி உருவாகிறது என்றும் அவர் கூறினார்.

30 வயதான டெண்டுல்கர் தனது 16 வயதில் 1989 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக அறிமுகமானார். அவர் 111 டெஸ்டில் விளையாடி 9,265 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 32 சதங்கள் அடங்கும். அத்துடன் 330 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 37 சதங்களுடன் 13,134 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார்.

# மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி வென்றது!

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்றுடன் முடிவடைந்த மூன்றாவதும், இறுதியுமான டெஸ்டையும் அவுஸ்ரேலிய அணி 121 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று கைப்பற்றியது.

முன்னதாக நான்காம் நாள் ஆட்ட முடிவின்போது 18 ஓட்டங்களைப் பெற்று விக்கெட் இழப்பின்றி இருந்த இலங்கை அணி நேற்றைய இறுதிநாளில் 352 ஓட்டங்களை எடுக்கவேண்டியிருந்தது. ஆனால், நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களையே மொத்தமாகப் பெற்றுக்கொண்டது.



இந்த அணி சார்பாக ஜெயசூர்யா 51, சமரவீர 53, ஜெயவர்த்தன 37, சங்ககார 27, டில்ஷான் 31 ஆகியோர் குறிப்பிடும்படியான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஷேன் வோர்ன் 4, டரன் லீமன் 3, கஷ்பிரோவிஷ் 2, ஜிலெஸ்பி 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மூன்று போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இரண்டாவது போட்டியை இலங்கை வென்றும், மூன்றாவது போட்டியை சமப்படுத்தவும் வேண்டிய நிலையில் இருந்த போதும்இலங்கை அணி இந்த இரு போட்டிகளையும் கோட்டைவிட்டது வருத்தத்துக்குரியதாகும்.

ரிக்கி பொன்டிங் தலைமையில் இலங்கைக்கெதிராக தொடங்கிய டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி 3:0 என்ற நிலையில் வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வாஜ்பாயை எதிர்த்து பொது வேட்பாளர் ராம்ஜெத்மலானிக்கு காங்கிரஸ் ஆதரவு

(புதுடெல்கி)

லக்னோ தொகுதியில் போட்டியிடும் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து போட்டியிடும் பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானிக்கு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாய் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அவர் வருகிற 13 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்கிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் கூட்டணி சார்பில் யார் போட்டியிடுவது என்பது குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் டெல்கியைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணியும், முன்னாள் மத்திய அமைச்சருமான ராம்ஜெத்மலானி பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக போட்டியிடத் தயார் என்று அறிவித்தார்.

இது குறித்து காங்கிரஸ் மேலிடம் தீவிரமாக பரிசீலனை செய்து வந்தது.

காங்கிரஸ் மேலிட தலைவரான பிரணாப் முகர்ஜி நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

லக்னோ தொகுதியில் பொது வேட்பாளராக போட்டியிட முன்வந்துள்ள ராம்ஜெத்மலானிக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கும். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் தவிர மற்ற கட்சிகள் ராம்ஜெத்மலானிக்கு ஆதரவு அளிக்குமா என்பது பற்றி நான் கருத்துக் கூறமுடியாது. மற்றக் கட்சிகளை நிர்ப்பந்திக்கவும் முடியாது. ஆனால், மத சார்பற்ற அனைத்து கட்சிகளின் ஆதரவையும் பெற ராம்ஜெத்மலானி முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார்.

லக்னோ தொகுதியில் காங்கிரஸ் ஆதரவு அளிக்க முன்வந்திருப்பது குறித்து ராம்ஜெத்மலானி நிருபர்களிடம் கருத்து வெளியிடுகையில் -

பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து போட்டியிட இருக்கும் எனக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. எனக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஆதரவளிக்க முன்வரவேண்டும். எந்த நிலையிலும் பிரதமர் வாஜ்பாயை எதிர்ப்பதில் இருந்து பின்வாங்கமாட்டேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உத்தரபிரதேச முதலமைச்சர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டி

உத்தரப்பிரதேச முதலமைச்சர் முலாயம்சிங் யாதவ் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகிறார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதி கட்சி, நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறது.

73 தொகுதிகளுக்கு அந்தக் கட்சி நேற்றுமுன்தினம் வேட்பாளரை அறிவித்தது. உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், உத்ராஞ்சல், மத்தியப் பிரதேசம், அசாம், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலும் அந்தக் கட்சி வேட்பாளரை நிறுத்துகிறது.

கட்சியின் பொதுச்செயலாளர் அமர்சிங் வேட்பாளர்களின் பெயர்களை வெளியிட்டார்.

முலாயம்சிங் யாதவ் உத்தரப்பிரதேசத்தில் மைன்புரி தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குப் போட்டியிடுகிறார்.

முதலமைச்சராக இருக்கும் அவர் நாடாளுமன்றத்துக்கு போட்டியிடுவது அரசியற்கட்சிகளிடையே வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதற்கிடையே கோரக்பூர் என்ற இடத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய முலாயம்சிங் - வரும் தேர்தலில் 60 இடங்களில் தங்கள் கட்சி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார். தங்கள் கட்சியே அடுத்த ஆட்சியின் தலைவிதியை நிர்ணயிக்கும் என்றும் அவர் கூறினார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### புதுவருடத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் திறந்திருக்கும்

எதிர்வரும் தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, சகல வர்த்தக ஸ்தாபனங்களும் 01.04.2004 தொடக்கம் 14.04.2004 வரையுள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், விடுமுறை தினங்களில் வேலைசெய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் எனவும்,

14.04,2004 இற்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி, வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

### கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் நாளை

கச்சதீவு புனித அந்தோனியார் வருடாந்த திருநாள் நாளை ஒரு நாள் மட்டும் நடைபெறவுள்ளது.

போதியளவு நிதிஒதுக்கீடுகள் மற்றும் படகு வசதிகள் இன்மையினால் குறிப்பிட்ட தினத்தன்று காலை நெடுந்தீவில் இருந்து பக்தர்கள் சென்று திருப்பலியை முடித்துக் கொண்டு அன்றைய தினமே திரும்பி வரும் வகையிலேயே ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை திருநாளை முன்னிட்டு ஆலய வளாகப் பகுதியை சுத்திகரித்தல், அலங்கரித்தல் போன்ற பணிகளுக்காக ஒரு குழுவினர் இன்றே அங்கு சென்று தங்கி நின்று வேலை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# துரோகிகளுக்கு துணைபோகாமல் ஓரணியாகநின்று தமிழ்த் தேசியத்தை வெற்றிபெறச் செய்யுங்கள்

## புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன்

தமிழர் போராட்ட வரலாற்றுக்கு எதிராக இருந்து கொண்டு, தமிழரின் அழிவினையே எண்ணும் துரோகிகளுக்கு, இந்தத் தேர்தலில் ஆதரவு தெரிவித்து, துணை போவதைவிடுத்து, தமிழர் தேசியத்தை உறுதிபெற இந்தத் தேர்ததில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பெருவெற்றிபெறச் செய்வதே உங்கள் சிந்தனையாக இருக்க வேண்டுமெனப் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

எமது கருத்துப்படி இந்தமுறை நாலரை இலட்சத்துக்கு மேல் வாக்குப்பதிவு இடம்பெறும். இந்த வாக்குப் பதிவு மூலமாகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு பெருவெற்றி கிடைக்கும். தோல்வி என்ற ஐயப்பாடே இங்கு காணப்படவில்லை. வெல்பவர் பக்கமே வரலாறு எழுதப்படுகிறது. அந்த வகையில் - 'விடுதலைப் புலிகளே மக்கள் - மக்களே விடுதலைப்புலிகள்' அந்த வகையில் இந்தமுறை மக்கள் வழங்கும் தீர்ப்பானது தமிழர் வரலாற்றை முன்னகர்த்தவே உதவவுள்ளது.

விடுதலைப் போராட்டத்தையே தம் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள் - எந்தச் சக்திக்கும் அடிப்பணிவதோ, விலை போனதாகவோ வரலாறில்லை. ஆனால், இன்று எம்மினத்திடையே விலை போகும் இரண்டு சக்திகளினால், மக்கள் மனங்களில் சிலவேளைகளில் சந்தேகங்கள் தோன்றலாம். அவற்றை நாம் புறக்கணிக்கவேண்டும். ஓர் வலுவான நிர்வாக கட்டமைப்பையும், படை பலத்தையும் 70 வீதமான நிலப்பரப்பையும் தம்மகத்தே கொண்ட விடுதலைப் புலிகள் - தமிழர் போராட்ட வரலாற்றில் இந்தத் தேர்தல் வெற்றி ஓர் முன்னகர்வாகவே அமையும்.

இன்று இலங்கை நாட்டு மக்கள் ஒவ்வொரு 74000 ரூபா கடனாளிகள். ஆனால், தமிழீழ மக்கள் எவரும் கடனாளிகளல்லர். நாட்டுக்காகவும், நாடுமே மக்களுககா, மக்களும் சுதந்திர விடுதலைப்கெனக் கடன்பட்டுள்ளனர். எமது விடுதலை போராட்டம் மிக அபரிதமாக வளர்ச்சி கண்டுவருகிறது. அதற்கேற்றவாறு எமது வரலாற்றை முன்னகர்த்த தமிழர் கூட்டமைப்பினை வெற்றிபெற வைக்கவேண்டும்.

இன்று போராட்ட வரலாற்றினூடாக இறுகி பின்னிப் பிணைந்த எமது சமுகத்தை உடைத்தெறிய துரோகிகளும், எதிரிகளும் கங்கணம் கட்டுகின்றனர். பிரதேச வாதத்தைத் தூண்டியும், துரோகிகளுக்கு உதவியும் எமது சமுதாய கட்டமைப்பை உடைக்க எண்ணுகின்றனர். இவற்றுக்கு நாம் விலைபோகக்கூடாது. கருணாவின் பிரச் சினையினை எமது தேசியத் தலைவர் சரியான முறையில் அணுகுவதால், இன்று எமது தேசியம் காப்பாற்றப்பட்டுள்ளது.

ஆனால், இன்று சாதாரண அரசியல் பெருந்தன்மையின்றி சைக்கிள், பால்மாக்கள், சாராயம் போன்றவற்றை எமது மக்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்து, எம்மவர்களின் வாக்குகளை வேட்டையாடுகின்றனர். இது அப்பட்டமான துரோகச்செயல். இதற்கு நீங்கள் விலை போகாதீர்கள். துரோகிகளைப் பாதுகாக்க இராணுவம் பொலிஸார் இங்குள்ளனர். இராணுவத்தை அனுப்ப வேண்டுமெனின், முதலில் துரோகிகளை நாம் அனுப்பி வைக்கவேண்டும்.

அதற்கு நீங்கள் இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். கடந்த தேர்தலில் கூட்டமைப்புடன் இணைந்த அனைத்து கட்சிகளும் தமிழர் விடுதலை வரலாற்றுக் காலத் தேவையை உணர்ந்துள்ளனர்.

ஆனால், அவற்றுடன் இணையாது தனித்து தமது சுயலாப அரசியலை நடாத்தும் தமிழர் விரோத உதிரி கட்சிகளை இந்தத் தேர்தலில் நிராகரித்து, தமிழர் தம் தேசியத்தை வலுப் பெற வாக்களியுங்கள் எனக் கூறினார். (205)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர் : ர.யதுசா
முகவரி : நாவலர் லோன், திருநெல்வேலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர்


# க.பொ.த.சாதாரண பரீட்சை மேலும் சில முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான க.பொ.த (சா/த) பரீட்சையில் மேலும் சில குடாநாட்டுப் பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு -

**பரியோவான் கல்லூரி** -
செவ்வகுமார் தரனீர்த்தன்-(9ஏ,பி), பத்மநாதன் திவாகரன்-(9ஏ,சி), செவ்வநாயகம் ஜனகன்-(9ஏ,சி), பரதன் கஜறூபன்-(9ஏ,சி), நவரட்ணம் நவநீதன்-(9ஏ,பி), சண்முகதாஸன் நிரோசன்-(9ஏ,பி), சிவஞானம் நிரோசன்-(9ஏ,பி), 8ஏ - 7 பேர்

**வயாவிளான் மத்திய மகா விததியாலயம்** -
பிள்ளை பாலறங்கன் - (9ஏ,எஸ்), 8ஏ, பி,சி ஒருவர், 6ஏ,3பி,சி 4 பேர்

**உடுவில் மகளிர் கல்லூரி** -
சிவனிசா சிவலிங்கம்-(10ஏ), சோபியா யோஜ்-(10ஏ), 8ஏ, 2பி - 3பேர், 7ஏ, 1பி, 2சி - ஒருவர், 7ஏ, 3சி - ஒருவர்

**மானிப்பாய் மகளிர் கல்லூரி** -
சுஜிதா யோகேந்திரன்-(9ஏ,பி), 8ஏ, 2பி - ஒருவர், 7ஏ,3பி-ஒருவர், 7ஏ, 2பி, சி- ஒருவர்

**கொக்குவில் இந்துக்கல்லூரி** -
வாணி-(10ஏ), க.கபிதாஸ்-(9ஏ), சி.பிலுஜா- (9ஏ), க.சரண்ஜா-(9ஏ), கு.கஜந்தன்-(9ஏ), சி.பிரதீப்-(9ஏ), சி.சிந்துஜா- (9ஏ), 8ஏ- 4பேர் , 7ஏ- 7பேர்.

**வேம்படி மகளிர் கல்லூரி** -
10ஏ பெற்றவர்கள் -
பிரியங்கரி சத்தியசீலன், மதுராந்தகா செல்வரத்தினம், தர்சனா குகதாஸ், அபிராமி மறைகாடர், அம்பிகா தேவகுமாரன், கோமசொரூபி அருளானந்தம், மயூரா மயில்வாகனம், பவித்திரா திசநாயகம்பிள்ளை, சாலினி திருக்கேஸ்வரன், சிவாஜினி மனோகரன், லயந்தினி சோமசுந்தரம், சாந்தி நடராஜா, சுகிர்தா சிறீவரதன்,

9ஏ பெற்றவர்கள் -
க.அபிராமி, டெ.கனிஸ்ரா , த.கிளனிஸ்ரா, பே.திவ்யா, சி.அஜந்தினி, கு.குகவதனா, சோ.மிர்தா, சி.உஷாந்தி, ப.வினோதா, யோ.அபிராமி, கு.காயத்திரி, சி.காயத்திரி, சி.கஜனி,

லாவண்யா கந்தசாமி, லாவண்யா பரமநாதன், மகிழினி சிவலிங்கம், மயூரிக்கா அருள்வேல், நிஷாரா இராஜதுரை, ரோகினி நாகலிங்கம், சாமந்தி வேலாயுதம், சஸ்ரூபி சிறி ஆனந்தராஜன், தயாளினி பிரகாஷ், சுமங்கலி கந்தசாமி, துஷ்யந்தினி நடராஜா, காயத்திரி பரமநாதர், 8ஏ-18 பேர் , 7ஏ-20 பேர், 6ஏ - 20 பேர்,

**யூனியன் கல்லூரி** -
விவேகானந்தன் ஜீவிதா-(10ஏ), கமலச்சந்திரன் சிந்திகா-(9ஏ), தனபாலசிங்கம் பிரசாத்-(8ஏ), தேவராஜா கவிதாஸ்-(7ஏ), யோகேந்திரா காயத்திரி-(7ஏ), குணதாசன் ஜனந்தினி-(7ஏ); 5ஏ-5 பேர்

**ஸ்கந்தவரோதயாக் கல்லூரி** -
வே. மீரா-(6ஏ), பா.கவிதா-(5ஏ)

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி** -
எஸ்.தாரிணி-(9ஏ,பி), 7ஏ,3பி ஒருவர்

**காரைநகர் கலாநிதி அ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்** -
பவிதா திருப்புகலூர்சிங்கம் - (9ஏ, சி), 8ஏ1பி1சி - இருவர், 8ஏ2சி-ஒருவர், 7ஏ2பி - ஒருவர்

**சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்** -
தேவரஞ்சனா-(10ஏ), ந.டர்சினி-(9ஏ,பி), கு.கஜேந்திரநாதன்- (9ஏ, எஸ்),



வட.மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் அண்மையில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட - கூட்டுறவு உதவி ஆணையாளர் சொ.சிவலிங்கம் மாணவி ஒருவருக்கு பரிசில்வழங்குவதைப் படத்தில் காணலாம். (91)

## இனந்தெரியாதோர் தாக்கி காயம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டோ ஒன்றில் வந்த மூவர் - கந்தர்மடம் சந்திப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்து தாக்குதல் நடத்தியதில் ஒருவர் காயமடந்தார்.

நேற்றுமுன்தினமிரவு 10.30 மணியளவில் ஓட்டோ ஒன்றில் வந்த மூவர் - விறகு கட்டையால் தாக்கியதில் மகாதேவன் புவனேந்திரராசா (வயது 33) என்ற வாய்பேசமுடியாதவர் காயமடைந்தார்.

இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (121)



யாழ்.கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசு வழங்கும் வைபவத்தில் - பாடசாலையின் நலன்விரும்பி ஞா.ஜோர்ச்சினால் ஒதுக்கப்பட்ட 100,000 நிதியிலிருந்து, அவரது மருமகன் பொ.அற்புதகுமார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (12)

### அன்னை நாகா புட்சிற்றியின்

# குலுக்கல் மூலம் தெரிவாகிய அதிர்ஷ்டசாலிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

அன்னை நாகா புட்சிற்றியின் மாதாந்த (பங்குனி மாதம்) குலுக் கல்மூலம் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

முதல் பரிசு - 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி பி.பாலமதி (சங்கானை),

இரண்டாம் பரிசு - 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி கே.அனிதா (உரும்பிராய்),

மூன்றாம் பரிசு - 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி டி.வசந்தன் (யாழ்ப்பாணம்),

நான்காம் பரிசு - ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுக்குரிய அதிரஷ்டசாலிகள் எஸ். குருபதன் (யாழ்ப்பாணம்), என். திருச்செல்வி (யாழ்ப்பாணம்), திருமதி பி.நடராஜா (யாழ்ப்பாணம்), எஸ். சிறிபுருஷோத்தமன் (புத்தூர்), கே.சுதாகர் (கொக்குவில்),

500 ரூபா பெறுமதியான ஆறுதல் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் எஸ். கிருஸ்ணவேணி (நல்லூர்), ரி.சத்தி யலோஜினி (ஆனைக்கோட்டை), ஏ.சிறிகரன் (நல்லூர்), ஜீ.முகுந்தன் (யாழ்ப்பாணம்), எஸ். தர்சினி (யாழ்ப்பாணம்), என்.விமலகாந்தன் (யாழ்ப்பாணம்), எம்.ஏ. தவேந்திரா (மானிப்பாய்), எஸ்.பத்திநாதர் (யாழ்ப்பாணம்),

ஆறுதல் பரிசாக மணிக்கூடு பெறும் அதிர்ஷ்டசாலிகள் - ஜே.சிவமனோகரன் (நல்லூர்), எஸ்.குட்டி (யாழ்ப்பாணம்), திருமதி கே.மணிமாறன் (வட்டுக்கோட்டை), சுவீட்டி ஜெனிகொட் (கோப்பாய்), ஜே.சந்திரமாலா (யாழ்ப்பாணம்), சி.மரியதாஸ் (யாழ்ப்பாணம்), ரி.இராசமணி (சுண்டுக்குளி), சி.எஸ்.தயாநந்தினி,

டொக்டர் கே.லோகநாதன் (யாழ்ப்பாணம்), எஸ்.வஸ்ரின் (யாழ்ப்பாணம்), வி.ராஜ்குமார் (சித்தங்கேணி), என்.குகன் (பருத்தித்துறை), எம். விஜயரட்ணம் (கந்தர்மடம்), செல்வி ஆர்.பாலசிங்கம் (யாழ்ப்பாணம்), என்.சத்தியசீலன் (சுன்னாகம்).

# தமிழ் இனத்தின் அரசியல் பலத்தினை தீர்மானிக்கின்ற தேர்தல் - 2004



யாழ்.மண் சிங்கள இனவாதத்தின் ஆக்கிரமிப்பினுள் அடிமைப்பட்டுக் கிடந்த காலம். கைதுகள், கொலைகள், சித்திரவதைகள், வன்முறைகள், கற்பழிப்புக்கள் என்பன எமது அன்றாட நிகழ்வுகளாக இருந்த காலம். கெடுபிடிகளுக்கு எதிராக தமிழ் மக்கள் மூச்சுவிடக்கூட அஞ்சிய காலம். புலிகளைப் பற்றியும், மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் பற்றியும் தமிழ் மக்கள் மனதுக்குள்கூட எண்ணிப்பார்க்க அஞ்சிய காலம். புலிகளைப்பற்றி, இனப்பிரச்சினைபற்றி, அரசு பொய்யான தவறான பிரசாரங்களை முடுக்கி விட்டிருந்த காலம். தேச விரோதக் கும்பல்கள் அரச படைகளுடன் இணைந்து தமிழின விரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காலம்

## கஜேந்திரன்

## தேசியப்பற்றுக்கொண்ட இளம் மாணவ தலைவனாய் பொங்கி எழுந்து போராடினான்

- அரச வன்முறைகளைக் கண்டு கொதித்தெழுந்து மக்கள் போராட்டத்தின் மூலம் எதிர்த்துப் போராடியவன்.
- சமாதானத்துக்கான போர் என்ற போர்வையில் தமிழின அழிப்பு நடைபெறுவதனை உலகிற்கு அம்பலப் படுத்தியவன்.
- பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் கைதுசெய்யப்பட்டபோதெல்லாம் மாணவர் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் போராடி விடுதலை தேடித் தந்தவன்.
- நேர்மையான பத்திரிகையாளன் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டபோது, மக்கள் எழுச்சியுடன் மாபெரும் கண்டனப் பேரணியை நடத்தி அக் கொடூரத்தை உலகிற்கு அம்பலப்படுத்தியவன்.
- பளைப் பகுதியில் அப்பாவி பொதுமக்கள் இராணுவத்தால் மனித கேடயமாக தடுத்து வைக்கப்பட்டபோது மக்கள் போராட்டத்தை நடாத்தி மக்களை விடுவித்துக் காப்பாற்றியவன்.
- கல்வி ரீதியில் எமது மாணவர்களை சீரழிக்கும் நோக்குடன் வன்னியில் நடக்க இருந்த க.பொ.த உ/த பரீட்சையை அரசு திட்டமிட்டு தடுக்க முற்பட்டபோது, அதனை கடுமையாக எதிர்த்து பரீட்சையை நடைபெற வைத்தவன்.
- புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள், தமிழ் மக்களின் உரிமைகள் ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் இல்லையேல் இலங்கைத்தீவில் சமாதானம் ஒருபோதும் ஏற்படாது என்பதனை பொங்குதமிழ் மூலம் உலகின் காதுகளில் ஓங்கி அறைந்தவன்.
- இத்தனையையும் ஒரு தனிமனிதனாக மக்களோடு மக்களாக எந்த அரசியல் பின்னணியும் இன்றி ஆயுத முனைகளுக்கு - நடுவே நடாத்திக்காட்டி இன்றைய சமாதான சூழலுக்கு வித்திட்டவன்.

இளம் தலைவன் சலுகைகளுக்கு விலை போகாதவன். எம் இனத்தின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் உன்னத இலட்சியவாதி.

# செல்வராஜா கஜேந்திரன்

## (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் - யாழ்.மாவட்டம்)

வீட்டுக்கு நேரேயும் பத்தாவது இலக்கத்துக்கு நேரேயும் ஒரு புள்ளடியிட்டு
எமது போராட்டம் உரிமைக்கான போராட்டம் என்பதை சர்வதேச உலகிற்கு உணர்த்த
மக்களின் இனப்பிரச்சினையை உண்மைத் தன்மையோடு எடுத்துரைக்கவும்

உண்மைக்கும் நேர்மைக்கும் இலட்சியத்துக்கும் வாக்களித்து
தமிழின விடுதலைக்கு பலம் சேர்ப்போம்.

X 10

மாணவர் சமூகம் யாழ்.மாவட்டம்



## கலாசாரம்



சிறுகதை



# என்னையும் விட்டுவிடவில்லை

கனத்த விழிகளைத் திறந்துவிட்டான் கானகன். ஆனால், நெஞ்சத்தின் சுமையை யார் இறக்கப்போகிறார்கள். இந்தச் சுமை என்ன அத்தனை இலகுவானதா இறக்கிக் கொள்ள. நேற்றையதினம் 45ஆம் இலக்கக் கட்டிலில் இருக்கும் அந்த ஐயாவிடம் காவல்துறையினர் விசாரணை செய்தபோது இசையோடு அவர் பாடிய பாடல்வரிகள் கானகனின் செவிகளில் ரீங்காரமிட்டது. அந்தப் பாடலின் இறுதி இரண்டு அடிகளையும் அவர் அழுத்தம் கொடுத்துப் பாடிய தன் அர்த்தம் இல்லாதபோது அவனது மனச்சுமைக்கு இதமாகவும் அர்த்தமுள்ள ஒரு தத்துவமாகவும் புரிந்தது... பாடலை மீட்டி மீட்டி அந்த இரு அடிகளையும், 'ஊன் எடுத்தபின் செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவோ'

சே, நாங்கள் என்னத்தைப் படிச்சுக் கிழிச்சுப் போட்டம். சமயவாதியான பட்டினத்தார் என்ன மாதிரி விளக்கியுள்ளார். எனக்கும் இது எவ்வளவோ பொருத்தமாக... இப்பத்தேக் கதையிலை சொல்றதெண்டா அந்த மாதிரிப் பொருத்தமாக இருக்கு. எனக்கு இந்தக்கால் பறிபோகுமென்ற எந்தச் சோதிடனும் சொல்லவில்லை. எனக்கு இப்படி நிகழும் என்று அறிந்த எவரும் நம்பவேமாட்டார்கள். அப்படியாயின் இது ஏன் நிகழ்ந்தது?... பூதாகரமான ஒரு கேள்வி என் நெஞ்சக் கூட்டுக்குள்ளிலிருந்து பீறிட்டு வந்து என் முன்னே கொத்துவதற்குத் தயாரான நாகத்தைப்போல நின்று சிரித்தது. அவன் தூக்கம் கலைந்த விழிகளை மூடி எதையோ நினைத்துக் கொண்டான்.

ஊருக்குள் உறவுகளின் முன் உன் உறவுக்காரி ஒருத்திக்கு உன்னைக்கொடுத்து உற்றாரும் கற்றோரும் வாழ்த்தும் அந்த ஒரு பொழுதை நான் கண்டு மகிழவேண்டும் மகனே. நாடு தந்தகேடு பெற்றவர்கள் தத்தம் பிள்ளைகளை எங்கெங்கோ உயிர் பிழைத்தால் போதுமென்று அனுப்பிவிட்ட ஒரு தர்மசங்கடமான நிலையில் உங்கள் எல்லோரையுமே பிரிந்து தனிமையில் வாழ்ந்து துடித்துக் துடித்துக் கொண்டிருந்தேன். இனி எனது கடைசிக்கால ஆசையைத் தான் எழுதியுள்ளேன். உன் அக்காமார் எல்லோரையும் நீ பரீஸ்நகரிற்கு அழைத்து அங்கேயே திருமணமும் செய்து கொடுத்து எமது கடன்களை எல்லாம் நிறைவேற்றிய உனக்கு முப்பத்தேழு வயதாகிவிட்டது மகனே. இனி உனக்கு எந்தச் சுமையுமே இல்லை. நாடும் நல்ல நிலையில் இப்போது சமாதானப் பேச்சுவார்த்தையால் சண்டை நின்றுவிட்டது. இந்தப் பொன்னான வேளையில் உன்னை நான் கண்ணாரக்கண்டு மனதாரவாழ்த்திச் செல்ல ஆசைப்படுகிறேன்.

"மகனே உனக்குத் தெரியும் தானே கந்தையா மாமாவின் மகள் காந்தமலர். உன்னோடு படித்தகாலத்திலிருந்தே உன்னைத்தான் வரித்துக்கொண்டதாகச் சொல்லி இன்னமும் அப்படியே இருக்கிறாள். பாவம் கந்தையா மாமா. செத்தும் ஒரு வருசமாய்ப் போச்சு. அவற்ரை பென்சன் காசிலைதான் மாமியும் மலரும். ஏதோ சீவியத்தைக் கொண்டு போகினம். செத்தவீட்டோடை நாங்கள் ஒற்றுமையாகிவிட்டோம். காந்தமலர் தான் எனக்கு வலக்கையாக இருந்து எல்லா உதவியும் செய்வாள். அதுதான் உனது அப்பாவுக்கும் அவள்மீது சரியான பிடிப்பும் விருப்பமுமாயிருக்கு. நீ விரைந்து வந்தால் நல்லூர் திருவிழாவோடை உனது கல்யாணத்தையும் முடித்துவிடலாம்" என அம்மா அன்று எழுதியிருந்த அந்தக் கடிதத்தோடு அவன் ஒன்றிப்போனானோ?

பாவம் கானகனின் கன்னத்தில் இரண்டு நதிகள் பாய்ந்ததுபோல கண்ணீர் நதிகள் பாய்ந்து, தலையணையை நனைத்துக் கொண்டிருந்தன. பாசத்தின் தாக்கமா அல்லது தன்நிலை பற்றிய கவலையா.

வைத்தியசாலை விடுதியில் வீட்டிற்குச் செல்வோரின் பரபரப்பான சத்தமும் நோயின் வேதனைக்குக் குரல் கொடுத்து அழுபவரின் அழுகுரலும் தாதிமாரின் சப்பாத்து ஓசையுமெனப் பலவித மனிதக்குரல்களின் ஓசைகளோடு, பரபரப்பாய் எல்லாரும் செயற்பட்டுக்கொண்டிருக்க, கானகன் மட்டும் விழிமூடி அழுதுகொண்டிருந்தான். யாருமறியாமல் அழுவதுகூட ஒரு சுகம்தான்.

யாருக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? எனக்கு ஏன் இது நடக்கவேண்டும்.

கானகனின் மனதை ஆற்றமுடியாத பெருந்துயரமாக எழுந்து அடங்கிய அந்தக் கேள்விகளோடு அவன் தூங்கிவிட்டான்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. கானகன் பரிசிலிருந்து வந்த நாள் அது. கோயிலில் பூசைகட்டி, நிறைவான மனத்தோடு கோயில் பிரசாதத்தைக் கொண்டுவந்து சேரவும், கானகனைச் சுமந்துவந்த மோட்டார் காரிலிருந்து கானகன் "அம்மா" என விழித்தவாறு இறங்கித் தாயைக் கட்டி அணைத்த அந்தக் காட்சி... தாயின் அணைப்பிலே சின்னக் குழந்தைபோலத் தன்னை மறந்திருந்த அந்தக் கணங்கள்... இத்தனை வயதான என்னை ஒரு சின்னகுழந்தைபோலக் கொஞ்சி விழிகள் பனிக்க என்னைத் தடவிக்கொண்டு, "மகனே மகனே" என்று பாசப்பெருக்கால் பேசமுடியாது, பிரசாதத்தட்டை கீழே போட்டுவிட்டதைக்கூட மறந்து... ஓ... இனி என்தாய் என் ஊனமான இந்தக் காலோடு என்னைப் பார்த்து... ஐயோ மகனே உன்னை இப்படிக் காணவா... விக்கி விக்கி அழப்போகிறாவே... அதைத் தாங்கிக்கொள்ளமுடியாதே!

கானகன் அன்னை இல்லம், என்ற அந்த வட்டினை எவ்வளவு அழகாக அம்மா வைத்திருக்கிறா... மனதுள் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க காந்தமலர் பின்னேவந்து நின்று, பேசமுடியாத வெட்கம் தோய்ந்த ஆசைகளை விழியால் வெளிப்படுத்தியவேளைகள்...

நண்பர்கள் வரவு, உறவினர், ஊரவர்கள்... என்றும் புதியவர்கள்... எனப் பலரும் வந்து போர்க்கால அனுபவங்களையும், இராணுவம் கொன்று புதைத்தவர்களது கதைகள். அப்பப்பா... இந்த மூன்று நாட்களுள் பதினேழு வருடச் சம்பவங்களைப் பேசிமுடிக்க முடியுமா? அழுகை - ஆனந்தம் - ஆர்ப்பரிப்பு - அட்டகாசம் - பரிதாபம்... எத்தனை எத்தனையோ... இன்னும்.

ஒருவரும் இல்லாத அந்த நேரம் ஏன் இப்படி விரைந்தது? கானகன் தான் பிறந்து வளர்ந்து இன்று விமானக்குண்டு வீச்சால் தரைமட்டமாகிவிட்ட அந்த வீட்டுமுற்றத்தைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்தான். முற்றத்தில் அந்த மாமரத்தின் நிழலில் கதிரைகளை வைத்துப் பேசியதும்... அதற்கு முன் ஓடி ஆடி விளையாடிய அந்த நித்திய கல்யாணிப் மனதில் ஏதோ பெரும் ஆசை விதைகளைத் தூவி வா வா என்று அழைப்பதுபோல இருக்கவே சென்றுகொண்டிருந்தான். இழந்து போன ஒன்று கிடைத்த மகிழ்வோடு.

"மாமி... மாமி... அத்தான் பின்வளவுக்குள் போகிறார். போகவிட வேண்டாம்... தடுத்து நிறுத்துங்கோ... மாமி... மாமி..."

"தம்பி... கானகன்..." தாயின் குரல் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வரவில்லை. ஆனால், கானகனின் கால் பட்டுக் கண்விழித்த அந்த நிலக்கண்ணி... அப்படியே வெடித்துத் தீர்ந்தது... "அம்மா" என்ற அலறலோடு, "ஐயோ ஐயோ" என்ற காந்திமலரது குரலும் கானகனின் தாயின் குரலும் அந்தப் புகைமண்டலத்துள்... இணைய..., எதிரொலியான அந்த அவலக்குரல்கள் அந்தப் பகுதியில் பலருக்கும் எதையோ சொல்லிக் கொண்டன. மக்கள் வெள்ளமெனக் கூடினர்.

அறிவிழந்தநிலையில் கானகன் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டான். காந்தமலரும் தாயோடு அன்னை இல்லத்திலே சோர்ந்து சுருண்டு கிடந்தாள்.

கானகனை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப்பிரிவிற்குள் கொண்டுசென்றபோது, தாயும் தந்தையுமாக வைத்திய சாலை வளவிலிருந்த அந்தக் கண்ணனின் கோயிலில் விழுந்து கதறிக்கொண்டிருந்தனர்.

"கண்ணா, என் கானகனின் கால்களைப் பறித்துவிட்டாயா? கண்ணா..." ஏதோ முடிவு புரிந்த மாதிரிக் கானகனின் அம்மா மனதுக்குள் மசிந்து மசிந்து நெஞ்சுருகி அழுதுகொண்டிருக்க, தாயாரோ "கண்ணா கண்ணா என் மகனுக்கு, ஐயோ இப்படி ஆக என்ரை கண்ணா... கண்ணா..." என்று கதறிக் கண்ணீரு திர்ந்தபடி கிடந்து புலம்பியவேளைகள்...

போர்க்காலக் கொடுமைகளில் எத்தனையோ பொம்மர் குண்டுவீச்சுகள், ஹெலிச்சூடுகளிற்குள் இருந்தெல்லாம் காப்பாற்றி வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்த அந்தப் பிள்ளையை, இப்ப இஞ்சை கூப்பிட்டு... அநியாயமா... காலை இழக்க... பலரது வாயில்களிலும் இப்படிச் செய்தியாகிப்போனது கானகனின் கதை.

பள்ளிக்கூட நாட்களிலே பார்த்துப் பரவசமடைந்த வண்டு விழிக்காரி காந்தமலர் எனக்கு...

ஆம். காந்தமலர்- நீலப்பட்டுடுத்தி, நித்தியப் பூமாலையிட்டு, குங்குமத் திலகமிட்டு நிற்க, பக்கத்தில் நானும் நிற்கவேண்டுமென்று பாரிசில் விரதமிருந்து, யாரையும் தீண்டாத அந்த விரல்களால் தீண்டி மகிழவேண்டுமென ஆயிரமாயிரம் இளமைக் கனவுகளைச் சுமந்த அந்த இதயம்... ஓ... அம்மா என அலறியவாறு கானகன் எழுந்து கொண்டபோது, தாயும் காந்தமலரும் நின்றிருந்தனர்.

தன் துயரங்களையெல்லாம் மனதுள் புதைத்தவனாகி, உள்ளத்தாலன்றி, உதட்டால் சிரித்து வரவேற்றான்.

பிள்ளையைப் புரியாத தாய்மையா?

காதலனைப் புரியாத காதலியா?... ஒருவரையொருவர் துயரத்தின் தாக்கத்தைக் காட்டிக்கொள்ளாது சிரிப்புமாறாது பேசிக்கொண்டனர்.

"அம்மா... இப்போதைக்கு இந்த ஊன்றுகோல்களைப் பாவிக்கட்டுமாம்... மூன்று மாதங்களின் பின் செயற்கைக் கால் போட்டுக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்..." என்று மிகச் சாதாரணமாகச் கானகன் கூறிவிட்டு, மலர் என்னவாம் எனத் தாயைக் கேட்பதுபோல்க் கேட்டுக்கொண்டே, மலரைப் பார்த்தான்.

பனிமூடிய சிலைபோல அவள் இருப்பதைப் புரிந்துகொண்ட கானகன் - "மலர் துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா? என்று பாரதிதாசன்ரை பாட்டு உனக்கு மறந்துபோச்சோ?" எனக்கேட்டு நிறுத்தினான்.

"ம்..." என மெல்ல இழுத்துவிட்டு, "பாம்பு வந்து கொத்துகையில் வாழும் உயிர் துடிக்கையில் யார் முகத்தில் பொங்கி வரும் சிரிப்பு" என்று கண்ணதாசன் பாடியதுதான் இப்போதைக்குச் சிலிர்க்குது... ஏனென்றால், பொம்பர்வந்து சுத்துகையில், ஹெலியும் சுட்டுத்தள்ளிவிட, தரைவழி துப்பாக்கியும் சடசடக்க, உயிரைக் கையிலை பிடித்துக்கொண்டோடிய எங்களிடம் வேறு எந்தப்பாட்டோ கவிதையோ நினைவிற்கு வருமா? நிற்குமா? கேள்வியோடு நிறுத்தினாள் காந்தமலர்.

கானகன் இந்தத் தேசத்தின் காவியம் இத்தனை துன்பமாக இருந்தாலும் எதிர்கால இன்பத்தின் சாயல் இது ஏனென்றால் துயரின்பின் தூயஇன்பம் என்று நான் எங்கோபடித்த ஞாபகம் என்று சொல்லிக்கொண்டே கட்டிலில் இருந்து இறங்கினான். காலொன்றிற்கும் ஊன்று கோலிற்குமிடையே தொங்கும் மற்றக் காலின் நிலையை எண்ணியபோது அவன்... எதிரேயும் காந்தமலரும் நினைவில் தட்டுத்தடுமாறிய மனதை எட்டிப்பிடித்து நிறுத்தியவாறு சென்று வண்டியில் ஏறினான்.

தாயகப் போரின் பங்காளியாக நின்று போராடாது தானும் தன் குடும்பமுமென்று தப்பி ஓடிய எனக்கு தமிழீழத்தாயின் தண்டனை தானிதுவோ? அல்லது ஆனந்தக்களிப்போடு வெற்றிக்களிப்பையும் தமது கலரையும் காட்டத்தாயகம் திரும்பிய என்போன்றவர்க்கு இப்படி நீங்கள் உன்னதமானநிலையில் வாழவும், மீளவந்து கொண்டதை மறந்துவிடக் கூடாதென்ற நினைவை ஊட்டுவதற்காகத்தானோ பலவாறு சிந்தித்தவாறு வீடு வந்து சேர்ந்தான்.

அம்மா! நான் இனி பாரீசுக்குப் போக முடியாது. இந்த நாடு அல்லது தாயகத்தின் காதலர்கள் பலர் என்னைப் போலத் திரியும்போது நான் இனியாவது தப்பிச் செல்லாது இங்கிருந்து தாயகப்பணியில் ஈடுபடப் போகின்றேன்... ஆனால்...

ம்.. ஏன் நிறுத்திவிட்டாய்.. சொல்லேன்.. தாயாரின் தூண்டல்... காந்தமலர் என்ன செய்வதாக உத்தேசம் என்று விளம்ப... அவளும் கால்தானே ஊனமானது உள்ளமல்லவே என... எண்ணத்திற்கான பதிலை சுடச்சுடவே கொடுத்துவிட்டுச் சிரித்துக்கொண்டபோது, எல்லா விழிகளும் பனித்தன.

சரி சரி... அம்மா நான் மலரோடு இங்கு இருக்கபபோவதாய் இந்தக் கீதோபசாரம் பற்றிப்பேசவேண்டும் என்று கண்ணன் தேரோட்டும் "கீதோபசாரம்" படத்தைச் சுட்டிக்காட்டினான்.

ஆயிரம் கேள்விகள் எழுந்து அந்தக் களத்தில் எல்லோரையும் திணறியடித்து. அடுத்தகணம் நகர மறுத்தவாறு மண்டியிடுவதுபோல இருந்தது.

ம்.. மலர் நீயேபடி.. ம்.. கீதாசாரத்தை வரிபிசகாது படி என்று கானகன் சொன்னபோது, அவனது ஆணைக்குக்காத்திருந்தது போலவே மலர் படித்தாள்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். உன்னுடையதை எதை நீ இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்? எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு..?

அப்போது நிறுத்து என்றான் கானகன்.

கானகனின்தாய், மகனில் ஏதோ உரம் ஏறுவது போன்ற ஒரு மாற்றம் புலப்படவே உற்று நோக்கினாள்...

அம்மா.. மலர் இருவரும் கேளுங்கள்.. இங்கே இந்தத் தாயகத்திலே நடந்த போரின் தாக்கம், அழிவு, இழப்புக்கள் தாங்கமுடியாதவை. ஆனால்.. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததாக உங்கள் கீதாசாரம் சொல்கிறது. இல்லையா?

மௌனம் நீடித்துக்கொண்டிருந்தது..

அம்மா நான்வரும்போது எல்லோரையும் போலவே தான் பிறந்தேன். நான் கொண்டுவந்த கால்களில் ஒன்றை இப்போது இழந்துவிட்டேன். எதை நீ கொண்டுவந்தாய் அதை இழப்பதற்கு என்ற வரிகளையும்... எதற்காக நீ அழுகிறாய் என்ற வரிகளையும் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்... இந்தக் கீதாசாரம் பிழையான ஒன்றை எம்மீது திணிக்கிறது. நான் கொண்டுவந்த கால் இல்லாது இழக்கப்பட்டது போல, இந்த நாட்டில் பல நூறுபேர் கால்களையும் - கைகளையும், கண்களையும் இழந்து அழுகிறார்களே, அழாது இருக்கமுடியுமா? இந்தக் காலை நான் ஏன் இழந்தேன்... நல்லதாக நடந்த போர் ஏன் நடந்தது? இனி நான் போகும்போது, ஒரு கால் இல்லாமல் போவதா? இந்தக் கேள்விகளிற்கான பதிலைச் சொல்லிவிட்டுப் படத்தை மாட்டுங்கள் இல்லையேல் கழற்றி எறியுங்கள். அந்த நிசப்தத்தில் என்ன? என்ன? என்ற கேள்விகள் எழுந்து பூதாகரமாகி எங்கும் எதிரொலியாகத் திரும்பி வந்தது.

என்கேள்விக்கென்ன பதில்? என் கேள்விக்கென்ன பதில்? என எங்கும் - எதிரொலித்தது...

கானகன் தன் ஊனமுற்ற காலைக் கையினால் தடவியவாறு இருந்தான் விழிகள் பனிக்கத்தான் செய்தன ஆயினும் அவன் மசியவே இல்லை...

மலர்... தம்பியின் கேள்வி எனக்கு சரியாகத்தான்படுகிறது... என்பிள்ளை மட்டுமா இப்படி இன்னும் எத்தனையோ பேர்... அத்தனைக்கும்...

மலர் கீதாசாரப் படத்தை தன் தளிர்க்கரத்தால் பற்றிக் கிழித்தாள் உறுதிதளராதவளாக...

கானகன் அடுத்தது என்ன? என்ற சிந்தனையில், தானே தன்னை மூழ்கடித்துக்கொண்டிருந்தான்.

# அந்தநாள் தேர்தல் ஞாபகம்



இன்றெல்லாம், கொடி கட்டக்கூடாது, நோட்டீஸ் ஒட்டக்கூடாது, வாகனங்களில் வாக்காளர்களை ஏற்றி வரக்கூடாது எனப் பல தேர்தல் நிபந்தனைகள் - கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால், முற்காலத்தில் தேர்தல் பிரசாரத்தின்போது, கட்சிகளுக்குரிய கொடிகள் எங்கும் பறக்கும், உயர்ந்த மரங்களிலும் காற்றில் படபடக்கும். கட்சி ஆதரவாளரின் வீட்டுப்படலையிலும் சிறுகொடிகள் இருக்கும். தார்த்தெருவில் வேட்பாளரின் பெயருடன், வாழ்க! வெல்க! வாக்களியுங்கள் என்று, கொட்டை எழுத்தில் வெள்ளை மையினால் எழுதப்பட்டிருக்கும். போட்டிக் கட்சியினர் மாறிமாறி கொடிகளை அறுப்பதும், அதனால் சண்டை பிடிப்பதும் வழக்கம்.

தேர்தல் சின்னங்கள் பயன்படுத்தும் முறை வருவதற்கு முன்பு அந்நாளில் பெரும்பாளும் இரு கட்சிகளே போட்டியிடும். கட்சிக்கு ஒருநிறப்பெட்டி ஒதுக்குப்படும். வர்ணக்கொடி கட்டிய கார்களில் பிரசுரங்கள் வீசியபடி, பச்சை பெட்டியில் உங்கள் வாக்குச் சீட்டுக்களை போடுங்கள் என்று, சத்தமிட்டபடி போவார்கள். எனக்கு அப்போ 5 வயதிருக்கும். பிரசுரங்களை பெறுக்கிச் சேர்த்து வைப்பேன் அவற்றைச் சேர்ப்பதற்கு சிறுவர்களிடையே போட்டி. என்னிடமிருந்த பிரசுரத்தை ஒருவன் பறித்துக்கொண்டு ஓட நான் துரத்தி அவனுக்கு கல்லால் எறிய அது அவன் முதுகில் விழ அவனுடைய அம்மா வந்து என் அப்பாவுடன் சண்டை பிடித்தது ஞாபகம்.

இந்த பச்சை சிவப்பு பெட்டி முறையின் கீழ் (தலைப்பா) நடேசனும், ஜீ.ஜீ.பொன்னம்பலமும் போட்டியிட்டதாக ஞாபகம்.

வளர்ந்தபிறகு நான் ஆதரித்தது தமிழரசுக்கட்சியை. இந்தக் கூட்சிக்கூட்டங்களில் பேசும் புதுமை போல, வண்ணை ஆனந்தன், மாவை.சேனாதிராஜா, ஆலாலசுந்தரம், கரிகாலன் போன்றோரின் அழகு நடைத்தமிழ் என்னைக்கவர்ந்தது. நானும் சில தமிழரசுக் கட்சிக்கூட்டங்களில் பேசிப்பழகினேன். இளைஞர்களுக்கு பேச்சுக்களை எழுதிக்கொடுத்து, தமிழரசுக் கட்சிக் கூட்டங்களில் பேச வாய்ப்பளித்தேன். சமீபத்தில் மறைந்த உதவிக்கல்விப்பணிப்பாளர் பொன். சபாபதி என்னிடம் பயிற்சி பெற்ற ஒருவர். மட்டுவில் மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ந.அருணாசலம் - தமிழரசுக்கட்சி சார்பில் சாவகச்சேரி தொகுதியில் போட்டியிட்டு, காங்கிரஸ் கட்சிசார்பில் போட்டியிட்ட குமாரசாமியிடம் தோற்றுப்போனார். அருணாசலம் அமைதியான மனிதர், சாவகச்சேரி வாரிய சங்கத்தை உருவாக்கியவர். சாவகச்சேரி நகரசபைத் தலைவராக இருந்தவர். அரசியலுக்குப் புதியவர். அவர் தோற்றதில் பலருக்கு கவலை. அடுத்து வந்த தேர்தலில் அவருடைய மருமகன் வி.என்.நவரத்தினத்தை தமிழரசுக்கட்சி சாவகச்சேரி தொகுதியில் போட்டியிட நிறுத்தியது. அவர் ஒரு சட்டத்தரணி எல்.எப்.பி. பட்டதாரி கொழும்பிலிருந்து படித்து ஜீ.ஜீயின் கிழ் தொழில் பயின்றவர் அதனால் தமிழ் அவ்வளவாக பேசவராது அவர் பட்டு வேட்டி சட்டையுடன் வாக்கு ஆதரவு கோரி எங்கள் சிற்றூருக்கு வந்தார். இளைஞர்கள் அவரை சூழ்ந்து கொண்டனர். வணக்கம் நான் இந்த ஊர்தான் பார்ளிமென் தேர்தலுக்கு போட்டியிடுறேன்... நீங்கள் எல்லாம் ஆதரிக்கவேணும் என்றார் கொன்னைத் தமிழில். மேலும் ஏதோ பேச முயன்றார். தயங்கினார். காரில் ஏறிப்போய்விட்டார். சாவகச்சேரி சந்தை உட்புறம் தமிழரசுக் கட்சியின் பொதுக்கூட்டம். மல்லாகம் சட்டத்தரணி நடராஜா சிம்மக்குரலில் பேசிக்கொண்டிருந்தார். நான், அருணாசலம் போன்ற பெரியார்கள் மேடையில் (மீதிப்பெயர்கள் நினைவில்லை) அமர்ந்திருந்தனர். அடுத்து வேட்பாளர் வி.என். நவரத்தினம் பேசுவார் என்று தலைவர் அறிவித்தார். நவரத்தினம் எழுந்து மேடையில் முன்பக்கம் வந்து நின்று கைகூப்பி வணக்கம் தெரிவித்தார். எல்லாருக்கும் வணக்கம் என்றார். ஒருகணம் தயங்கினார். (தமிழ் வரவில்லை) ஆங்கிலத்தில் அவர் **I Am Prepared To Sacritice Mi Life, Wealth and Happiness For the Freedam Of The Tamil Speaking Peopll** என்றார். எத்தனை பேருக்கு புரிந்திருக்கும் அது, கூட்டத்தில் சத்தம் குழப்பம். தமிழ் பேசத்தெரியாதவரா தமிழ் மக்களுக்காக பாடுபடப்போகின்றார் என்றொரு குரல். நவரத்தினம் திகைத்து நின்றார். தலைவர் எழுந்து நவரத்தினத்தை பத்திரமாக மெல்ல பின்னால் அழைத்து, கதிரையில் அமரவைத்தார். குழப்பம் அடங்கவில்லை. தலைவர் ஒலிபெருக்கி முன் போய்நின்று, தயவுசெய்து அமைதியாய் இருங்கள் எனப் பலமுறை சொல்லிப்பார்த்தார். ஒலிபெருக்கியை மீறிய ஆர்ப்பாட்டம் வாணைப்பிளந்தது. மேடையில் இருந்தவர்கள் இறங்கி ஒரு பக்கம் ஒதுங்கி நின்றனர்.

மேடையருகே நின்ற நான், ஒலிபெருக்கியை எடுத்து கீழே வைத்துக்கொண்டு அமைதி அமைதி என்று பலமுறை சத்தமிட்டேன்.

ஓரளவு அமைதிபிறந்தது. தலைவர் வந்தார் ஒலிபெருக்கியை வாங்கி பேசினார். அன்பு மக்களே கட்சி சார்பில் போட்டியிடும் நவரத்தினம் நன்கு படித்தவர் திறமையானவர். சட்டத்துறையில் எல்.எப்.பட்டம் பெற்ற நாலைந்து பேரில் ஒருவர் அவர். கொழும்பில் படித்து, பிரபல சட்ட அறிஞர்கள் மத்தியில் தொழில் புரிகின்ற காரணத்தால் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். தமிழில் மேடையில் சொற்பொழிவாற்றும் அளவுக்கு பயிற்சி பெறவில்லை. இன்னும் சில நாளில் அவர் தமிழில் அழகாக பேசுவார். நீங்கள் அவரை ஆதரித்து வாக்களித்து நாடாளுமன்றுக்கு அனுப்புங்கள் என்று கேட்டுக்கொண்டார். அவர் சொன்னது பலித்தது. அடுத்து வந்த பொதுக்கூட்டங்களில் நவரத்தினம் தமிழில் பல நிமிடங்கள் பேசினார். தேர்தலில் வென்றார். பின்னாளில் அரசியல் கூட்டங்களிலும் சமூக நிகழ்வுகளிலும் அவர் சலனமாக ஒருமணிநேரம் பேசுவார். தொடர்ந்து, அடுத்தடுத்த தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

வட்டுக்கோட்டை தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக பலமுறையும் வெற்றி பெற்றவர் அமிர்தலிங்கம். ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமைமிக்கவர். அரசியற்கூட்டங்களிலும், இல்க்கிய கூட்டங்களிலும் நீண்ட நேரம் பேசும் திறமை பெற்றவர். இவரும் சாவகச்சேரி நவரத்தினமும் மக்கள் அவையில் பேசும் தொணியை அவதானித்த எஸ்.டபிள்யூ.ஆர்.பண்டாரநாயக்கா இவர்களை பாராட்டியதாக செய்தி பரவியது ஞாபகம். என்னதான் பாராட்டுப்பெற்றும், தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தை அவர்களால் வென்றெடுக்கமுடியவில்லை என்ற குறையேதான்.

தந்தை செல்வா எனப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மென்மையாக பேசும் இயல்புடையவர். நாடாளுமன்றிலும் சரி, வெளியில் பொதுக்கூட்டத்திலும் சரி, அவருடைய அமைதியான பேச்சு எதிர்க்கட்சியினராலும் கூட பாராட்டப்பட்டது. தன் அரசியல் கொள்கையை ஆர்ப்பாட்டமின்றி தெரிவித்தார். காலி முகத்திடலில் அமர்ந்து சத்தியப்போர் செய்தார். பெரும்பான்மை இனத்தவரின் காலுதைக்கு இலக்கானார். தமிழினம் பிரிந்து செல்வதே, உரிமையுடன் வாழ ஒரே வழி என்று இறுதியாக சொல்லிவிட்டுப் போனார். அவருடைய தூரநோக்கு சரியே என்று இன்று தெரிகிறதல்லவா?

**-வேரற்கேணியன்**

# மறக்கமுடியவில்லை உன்னை!

எங்கேயோ போய்விட்டாய்,
உனக்காக
தொலைந்த நாட்கள்,
எதிரியான நண்பர்கள்
உதிர்ந்த பூமரங்கள்
திட்டின என் அம்மா
அறுந்த ஊஞ்சல் கயிறு
தலையாட்டின முகங்களுக்கு
என்ன
சொல்லப்போகின்றாய்!

வருவாயா நான் போகும்
பேருந்தில்,
யன்னல் திறந்திருக்கும்
அமர்ந்திருக்க இருக்கை இருந்தும்
எழுந்து வந்து வெளியே
பார்த்தபடி
என்னதான் என்னவள் வருவாளா
மெல்லிய தென்றல் தாலாட்ட
நினைத்ததுண்டு,
நான் இறங்கும் இடம் வரும்
வரை!

தோளில் படும்
என்கையை உன்கை
பற்றியதுண்டு,
உனக்கு ஆறுதல் சொல்லப்
போய்
நான் ஆறுதலடைந்தேன்,
இன்று பார்த்துக் கொண்டே
இருக்கின்றேன்.
உன் தோள் பற்றிய
என் கையை!

இரவு வேளையில் இருந்ததில்லை
எங்கேயும்,
நேரமாகிவிட்டது போவோம் என்று
சொல்லும் நீ இல்லாத போது
இருந்துவிட்டேன்.
ஆனால் சந்தித்த நாட்கள்
போய்விட்டன, அப்படியிருந்தும்
நீ இருந்த இடமும்
நான் தினமும் வந்து போகும்
இடமும்
மாறவேயில்லை!

உனக்கும் எனக்குமாக
சேர்த்து வைத்த நட்சத்திரங்கள்
இரவில்தான் வருகின்றன
ஊரடங்குகின்ற அந்த இரவு
நேரத்தில்
கேட்டிருக்கின்றேன்.
பறவைகளின் ஓசையையும்
கடல் அலைகளின்
ஓசையையும்
இனிமையான இந்த
ஓசைகளுக்கும்
இரவு தான் அழகு,
ஆனாலும் முடியவில்லை
தூங்கிவிடுவேன்!

பொங்குகின்ற அலையை
இருளின் நிலவில் பார்த்திருக்க
இடி மின்னலும் தவளைச்சத்தத்திலும்
மழைவருகையை கேட்டிருந்தும்
உண்மையாக்கிய
வானவில்லையும் நட்சத்திரங்க்ளையும்
காணவில்லை!

என்னை விட்டுத் தூரப்போக
முடியவில்லை
தொடர்ந்து வருகின்றது என்
நிழல்,
வாழ் நாளில் ஒவ்வொருநாள்
பொழுதும் காணாமல் போகையிலும்
அடுத்த நாள் பொழுது
புதிய நாளாக வருகையிலும்
மறக்க முடியவில்லை
உன்னை!

**செல்வா**

# கிடைத்த இடம்

புத்தகங்களை வாசிப்பதிலும் வாசித்த புத்தகங்களை பேணி வைப்பதிலும் சுந்தர் அக்கறையுடையவன். தன்னிடம் இருக்கும் புத்தகங்களை தேடிக்கொண்டு வந்து வீட்டில்வைத்து வாசித்துவிட்டு தன்னுடைய புத்தக அலுமாரியில் வைத்து விடுவான்.

தன்னுடைய புத்தகங்களை, தான் மட்டும் வாசிப்பதில்லை. வாசித்த புத்தகங்களை இன்னொருவரிடம் வாசிக்குமாறு கொடுப்பான். வாசித்த விடயங்களை மற்றவர்களுக்கு சொல்லிப் புரியவைப்பான். புத்தகங்கள் பற்றிய விவாதங்களை மேடை போட்டு நடத்தாவிட்டாலும் தன்னைச் சந்திப்பவர்களோடு விவாதம் செய்வான்.

கருத்துக்கள் உள்ள புத்தகங்கள் எந்த மூலையில் இருந்தாலும், அவற்றை வாங்கிவந்து சேர்க்கும்வரை அவனுக்கு தூக்கம் ஏற்படுவதில்லை.

சுந்தரின் காதில் மட்டுமே வீழ்ந்த புத்தகம் ஒன்று சுந்தரின் கண்களுக்குப்படாமல் பல நாட்களாக ஒளிந்து கொண்டிருக்கின்றது. சுந்தர் அந்தப் புத்தகத்தை தேடி பல ரூபாய்களைச் செலவுசெய்துவிட்டான். அவன் செய்த செலவீனங்களை கணக்கில் எடுத்தால் புத்தகத்தின் விலையோடு ஒப்பிடுகையில் பல புத்தகங்களை வாங்கிவிடமுடியும்.

சுந்தர் தேடிக்கொண்டிருந்த நூல் தமிழர்களின் வரலாறுகளை விளக்கமாகக் கூறுகின்ற ஒரு நூலாகும். தமிழர்கள் தமது மண்ணில் எவ்வாறு சுயகௌரவத்துடன் வாழ்ந்தார்கள், அவர்கள் தம்முடைய உரிமைகளுடன் நிம்மதியாக வாழ்ந்த நிலைகள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தமிழர்கள் அரசியல் பொருளாதார சமூகநிலையில் எவ்வாறு முன்னேற்றம் அடைந்திருந்தார்கள் என்பதை, சுந்தர் தேடிக் கொண்டிருக்கும் நூல் குறிப்பிடத்தக்கது.

சுந்தர் இந்த நூலைத் தேடிக்களைத்து ஒரு முடிவுக்கு வந்தான். தன்னுடைய காலத்தில் கேட்ட இந்த நூலின் விடயங்கள், நூல் பற்றிய தகவல்கள் பொய்யாக இருக்குமோ என்பது தான் அவனின் எண்ணம்.

தான் தேடும் அந்த நூல் தன் கண்ணால் பார்க்காமல் காதால் மட்டுமே கேட்கக் கூடியதாக இருப்பது போல, இந்த நூலும் எழுதப்படாமல் செவிவழியாகவே பரவி வருகின்றதோ என்ற சந்தேகமும் அவனிடத்தில் தோன்றிஇருந்தது.

நூலைத்தேடிக்களைத்த அவன் ஒருநாள் சைக்கிளில் சென்று கொண்டிருந்தான். வெயில் கொடுமை காரணமாக கொஞ்சம் ஆறிவிட்டுச் செல்வோம் என்று நினைத்து தேநீர்க் கடை ஒன்றின் அருகே சைக்கிளை நிறுத்திவிட்டு, தேநீர்க் கடையின் உள்ளே சென்றான்.

'அண்ணை ஒரு பிளேன் ரீ தாங்கோ', 'சாப்பிட வடை தாங்கோ' என்று கேட்டு, சற்று நேரத்தில் அவன் மேசைக்கு வந்து, தனி வடையைச் சாப்பிட்டுவிட்டு, தன்கையில் இருந்த எண்ணையைத் துடைப்பதற்கு பேப்பரை எடுத்தான்.

அந்தப் பேப்பர் ஒரு புத்தகத்தில் முன்னுரையாக அமைந்த பகுதியின் ஒரு தாளாகும். அதனை சாதாரணமாக எடுத்து வாசித்துப் பார்த்தான். சுந்தர் பல நாளாகத் தேடித்திரிந்த நூல் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி அவனிடத்தில் இருந்தது. சுந்தரின் முகத்தில் கவலைரேகையும் காணக்கூடியதாக இருந்தது.

**(பூ.நகுலன்)**

# தொலைந்தது!

மாலை ஐந்து மணியிருக்கும், பேருந்து நிலையத்தை நோக்கி நடக்கின்றேன். இரண்டு பேருந்துகளில் ஏறியே நான் இருக்கும் இடத்திற்குச் செல்லவேண்டும். நான் இருப்பது களுபோவில. எனது அலுவலகமோ கொல்பிட்டி.

அன்றும் பிரதானவீதியை வந்தடைந்ததும், எனக்காக காத்திருப்பது போன்று பேருந்து நிற்கிறது. அவசரத்தில் பேருந்தினுள்ளே ஒரு தாவல். ஒரு இருக்கையில் மட்டும் ஒருவர் இருக்கக் கூடிய இடம் மீதமாயிருந்தது. அமர்ந்து கொண்டேன் அருகில் இருந்துவரும் என்னைப் போன்று அலுவலகத்திலிருந்து வரும் ஒருவர் என்பதை அவரது அலுவலகப்பையும் முகத்தில் காணப்பட்ட களைப்பும் கோடிட்டுக்காட்டின.

சற்றுப்பார்வையை அருகில் திருப்பினேன். எனக்கு நேரே அருகில் உள்ள ஆசனத்தில் ஒரு அழகிய இளம் பெண் நாகரிகமான உடையில் அமர்ந்திருந்தாள். அவளது காலடியில் ஒரு 50 ரூபாய் தாள் ஒன்று விழுந்து கிடந்தது.

சுற்றும் முற்றிலும் பார்த்தேன். எவரும் பணத்தைத் தொலைத்ததற்கான அறிகுறிகள் தென்படவில்லை. பணத்தை எடுத்துக்கொள்ளலாமா என, ஒரு கணம் சிந்தித்தேன். ஆனால் இவ்வளவு சனங்கள் முன்னிலையில் அதுவும் ஒரு பெண்ணுக்கு முன்னால் பணத்தினை எடுப்பது ஏதோ எனது சுயகௌரவத்துக்கு இழுக்குப் போன்று தோன்றியது. நான் அந்த 50 ரூபாவினை எடுக்க எண்ணும் போதெல்லாம் அந்தப் பெண் என்னை ஏளனமாகப் பார்ப்பதாக எனக்குள் ஒரு அவஸ்தை.

எனது மனப்போராட்டத்திலே நேரம் சென்றது தெரியவில்லை. நான் இறங்கவேண்டிய சந்தியும் வந்தது. கைக்கெட்டியும் வாய்க்கு எட்டவில்லையே என்பது போல ஒரு உணர்வில், அடுத்த பேருந்திற்காக காத்திருக்கின்றேன்.

பேருந்தும் வந்தது பேருந்தில் சனங்கள் அதிகமாகையால் நடத்துனர் பணத்தினை வேண்டிய பின்னரே பயணிகளை ஏற்றினர். எனது முறைவந்ததும் பொக்கற்றில் கையை வைத்தேன். அப்போதுதான் உணர்ந்தேன் முதல் பேருந்தில் காணப்பட்டது எனது பணம் என்று.

**லெஸ்லி**

**எழுச்சி கொள்வீர்! தேர்தலில் புரட்சி கொள்வீர்!**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் இறுதிப் பொதுக்கூட்டம்

இடம் :- நல்லூர் கந்தசாமி கோவில் முன்றில்
காலம் :- 30.03.2004 செவ்வாய் மாலை 6.00 மணி

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து வேட்பாளர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் சிறப்புரையாற்றுவர்**

சிறப்பு நிகழ்வாக...

## தமிழீழ இசைக்குழுவின் இசைமுழக்கம்

தமிழீழத்தின் புகழ்பூத்த பாடகர்கள் S.G.சாந்தன் ஜெயாசுகுமார், நிரோஜன், பார்வதி சிவபாதம், திருமலைச் சந்திரன் மற்றும் பிரபல பாடகர்கள் கலந்து கொள்வர்.

**அலைகடல் வெள்ளம்போல அனைவரும் திரண்டுவருமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

ஒழுங்கமைப்பாளர் - தமிழர் தேசியக் கூட்டமைப்பு

(சி-2355)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - யாழ்.மாவட்டம் - 2004



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

- மறத்தமிழர் நாம் மண்டியிட மாட்டோம் என்பதை சிங்கள தேசத்திற்கு உணர்த்திட...
- புலிகளின் பின்னால் விடுதலைக்கு உழைக்க ஒன்றுபட்டோம் என்பதை வெளிப்படுத்திட...
- இனத்தை விற்று பிழைப்போரை எட்ட விரட்டிட...

## அளியுங்கள் உங்கள் வாக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு

தாயகத்தின் விடிவுக்காக
ஜனநாயக வழியில் போராடி
தியாகியான மாமனிதர்
குமார் பொன்னம்பலத்தின் புதல்வன்

இல. 5



திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

மாமனிதர் குமாரின் வாழ்வில் பயணிக்கும் கொள்கை வீரர்களுக்கு உங்கள் விருப்பு வாக்கை வழங்கி பெருவெற்றி பெறச் செய்யுங்கள்.

தமிழ்த்தேசியத்தின் விடிவுக்காகத்
தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றும்
செயல்வீரர்

இல. 9



திரு.சீ.வீ.கே.சிவஞானம்

**கூட்டமைப்பின் வெற்றி தமிழினத்தின் வெற்றி**

நாச்சிமார் கோவிலடி
வாழ் மக்கள்

**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X

(662)

சர்வதேச அரசியல்... -கே.ரீ.கணேசலிங்கம்-

# மீண்டும் ஒரு தடவை அமெரிக்கப் பயங்கரவாதம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது



உலக அரசியலில் ஹமாஸ் இயக்கத்தின் ஆத்மீகத் தலைவர் சேக் அகமட் யசீன் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. அது ஒரு இஸ்ரேலிய - பலஸ்தீன பிணக்காக மட்டும் அமையாது, முழு உலக அரசியலும் மேலும் ஒரு அம்பலத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. காஸாப் பகுதியில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் சேக் அகமட் யசீன் கொல்லப்பட்டார். யசீனுடன் ஏழு பலஸ்தீனர்களும் கொல்லப்பட்டதுடன், பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டபோது நிகழ்ந்ததாக தெரியவந்துள்ளது. யசீன் மீதான படுகொலை ஏற்படுத்தியுள்ள அரசியல் அம்பலப்படுத்தலையும், உலக நாடுகளின் நிலைகளையும் அளவீடு செய்வோம்.

பயங்கரவாதமெது, தீவிரவாதமெது என்ற வகைப்பாட்டை உலகம் செம்மையாக ஒழுங்குபடுத்திவிட்டதாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. ஆயுதம்தாங்கிய எல்லா அமைப்புக்களும் பயங்கரவாதங்களுமில்லை அதற்காக பயங்கரவாதம் ஆயுதம் தாங்காமல் செயற்படுவதில்லை. ஆனால், உலகப் புலமையாளர்களின் கருத்து நிலையில் பயங்கரவாதம் என்பதை இனங்காண அந்த அமைப்பின் அல்லது குழுவின் கொள்கையையும் அதனை அமுலாக்கும் தன்மையையும் பொறுத்ததாகவே அமைந்துள்ளது என்ற முடிபுக்கு வந்துள்ளனர். அதனடிப்படையில், ஹமாஸ் என்பதை இஸ்ரேலியரும், அமெரிக்கர்களும் பயங்கரவாத அமைப்பாக பார்ப்பதுபோல புலமைசார் அறிஞர்கள் மதிப்பிடவில்லை. ஏனெனில், யசீன் கொல்லப்பட்டதைக் 'கண்டிக்காத அரசுகள் உலகில் இரண்டு மட்டுமே அமெரிக்காவும், இஸ்ரேலும். அதனால், பிரிட்டன் கண்டித்துவிட்டது. அதிகமான விமர்சனங்களை முன்வைத்துவிட்டது. அதனால், அது ஹமாஸை ஏற்றுக்கொள்ளப்போகின்றதோ அல்லது பயங்கரவாதம் என்ற நிலையை சரியாக அளவீடு செய்யப்போகின்றதோ என்பதல்ல. மறுவளமாக பிரிட்டன் உட்பட்ட மேற்குலகம் சில அரசியல் இலாபங்களை அடைந்துள்ளன என்று கூறலாம்.

அந்த அவ்வாறான சூழலில் அமெரிக்கா இந்த விடயத்தை ஆதரிப்பதுடன் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக தனது 'வீட்டோவை' பயன்படுத்தியுள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். இது இஸ்ரேலின் பயங்கரவாதத்தை அனுமதிப்பதுடன் இஸ்ரேல் - பலஸ்தீனத்தின் பயங்கரவாத நடவடிக்கையை ஊக்குவிப்பதாகவே அமையும். புதிய உலகஒழுங்கு உருவான பின்பு அமெரிக்கா தனது 'வீட்டோவை' இஸ்ரேலுக்காக மீளவும் ஒரு தடவை பிரயோகித்துள்ளது. இது முழு உலகத்தையும் அமெரிக்கா நிராகரிப்பதுடன் அமெரிக்காவின் பயங்கரவாதத்தை மீண்டும் ஒரு தடவை அம்பலப்படுத்தியுள்ளது என்றே கூறலாம்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை உலகில் அமெரிக்கா எதனை ஊக்குவிக்க விரும்புகிறதென்பதைக் காட்டுகின்றது. இந்தியாவுடன் நட்புக்கரம் நீட்டிக்கொண்டு பாகிஸ்தானின் நடவடிக்கைகளை அமெரிக்கா ஆதரிப்பது போன்றது, உலகம் முழுவதும் பயங்கரவாதம் என்ற சுலோகத்தை முன்னிறுத்தி அதற்கு எதிராகப் போராடமுயலும் அரசுகளை ஒன்றிணைத்துக்கொண்டு, போரிடும் அமெரிக்கா இஸ்ரேலின் நடவடிக்கையை கண்டிக்காது ஆதரித்தமை அதன் மாறுவேடத்தைக் காட்டுகின்றது.

ஐ.நா. சபையில் பாதுகாப்புச் சபை, இஸ்ரேல்மீது அத்தகைய கண்டனத் தீர்மானத்தையே அமெரிக்கா ஏற்றுக்கொள்ள தயாரில்லை என்றால், எப்படி இரண்டு சக்திகளையும் ஒன்றிணைப்பது. ஹமாஸ் அமைப்பு யசீனின் படுகொலையைத் தொடர்ந்து, பாரிய அழிவுகளை ஏற்படுத்துமளவுக்கு ஒரு தாக்குதலை ஆரம்பிக்கத் திட்டமிட்டு வருகிறது. புதிய ஆத்மீகத் தலைவரை தெரிவு செய்யும் மாநாட்டிலும் அதன் பின்பும் ஹமாஸ் பாரிய தாக்குதலை செய்யத் தயாராகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக அதன் நடவடிக்கைகள் வெளிப்படையாக தென்படுகின்றது. எனவே, அமெரிக்கா - லிபியாவை, வடகொரியாவை, ஈராக்கை, ஈரானை விரட்டுவதுபோல் இஸ்ரேலினைத் தாக்க தயாராகவில்லை.

யசீன் படுகொலை ஹமாஸின் தீவிர நடவடிக்கையை தூண்டுவதுடன் ஏற்கனவே, வளர்ந்துவந்த ஆதரவை மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டது. பலஸ்தீன விடுதலை இயக்கமும் (P.L.O) யசீர் அரபாத்தும் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதுடன், கடந்த காலத்தில் இருந்து மேற்காசிய நாடுகள் ஹமாஸை முழுமையாக ஆதரிக்காத நிலையை இது மாற்றிவிட்டது. ஏறக்குறைய P.L.O அப்புறப்படுத்தப்பட்டு ஹமாஸ் அந்த இடத்தை நிரப்புவதுடன், அதன் உத்திகளும் அணுகுமுறைகளும் இஸ்லாமிய மற்றும் ஏனைய மேற்காசிய சக்திகளால் அங்கீகரிக்கப்படும் நிலை ஏற்பட வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இதனை பலஸ்தீன மக்களும் ஏற்றுவருவதுடன், ஹமாஸுக்கு ஆதரவாக அணிதிரண்டு வருகின்றபோக்கும் நிலவுகின்றது. அடிப்படை முரண்பாட்டுகளைக் கொண்ட மிதவாத சக்தியாக P.L.Oவும் அரபாத்தும் மாறிக்கொண்டு செல்லும்போதும், இஸ்ரேலின் அணுகு முறைக்கு நவீன பாணியில் பதிலளிக்கும் பலத்தை ஹமாஸ் பெற்றுள்ளது. இதனால், இனிவரும் இஸ்ரேலிய - பலஸ்தீன அரசியல் போராட்டத்தில் ஹமாஸ் கணிசமான இடத்தைப் பெறும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

அப்படியாயின், இந்த மாதிரியான நடவடிக்கையை ஏன் அமெரிக்கா ஆதரிக்கிறது. என்பதே அடுத்த கேள்வியாகும். நிச்சயமாக அமெரிக்கா ஹமாஸ் பிரிவு தொடங்கும்போது, வெளிப்படையாக அன்றி உள்ளூர ஆதரித்தே வந்துள்ளது. ஏனெனில், பலஸ்தீன விடுதலை அமைப்பு துண்டாடப்படுவது அமெரிக்காவின் நலனுக்கும், இஸ்ரேலின் நட்புக்கும் பாதுகாப்பானதாகும். ஆனால், இது இப்படி வளர்ந்து பாரிய அமைப்பாக மாறும் என யாரும் அப்போது எதிர்பார்க்கவில்லை.

ஹமாஸின் ஆரம்பத்திற்கு பின்னணியாக சிரியா மற்றும் ஈரான் என்பன இருந்தன என்பது உலகத்திற்குத் தெரிந்ததுபோல் அமெரிக்க உளவுத்துறைக்கு முன்கூட்டியே தெரிந்துகொண்டது. அதனாலேயே, அந்த நாடுகள் மீது அமெரிக்கா மீண்டும், மீண்டும் நெருக்கடியைக் கொடுத்துவருவதற்கு காரணமாகின்றது.

இதனால், ஹமாஸ் அமைப்பின்மீதான நடவடிக்கையை மேற்கொள்வது அமெரிக்காவிற்குத் தவிர்க்க முடியாததாக மாறிவிட்டது. ஏனெனில், ஹமாஸ் அந்தளவுக்கு வளர்ந்துவிட்டது. அத்தோடு, இஸ்லாமிய அடிப்படை வாதத்தை பின்னணியாக கொண்டிருப்பதுடன் பல ஏனைய இஸ்லாமிய அமைப்புக்களுடன் உறவுகளை பலப்படுத்தி வருகின்றது. எனவே, ஹமாஸ் அழிக்கப்படுவதில் அமெரிக்கா கவனம் கொள்கின்றது. இஸ்ரேலின் தனித்துவத்தை பாதுகாப்பதுடன் மேற்காசியாவில் அமெரிக்காவின் நலன்களை ஏற்படுத்திக்கொள்ளலாமென கணக்குப்போடுகின்றது.

அதைவிட இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினை தீர்க்கப்படக்கூடாது என்பதிலும் அமெரிக்கா கரிசனையாக உள்ளது. இதுவரை எத்தனையோ உடன்பாடுகள் அமெரிக்காவின் தலைமையில் இரு அரசுகளும் ஒப்பமிட்டன. ஆனால், எவையும் அமுல்படுத்தப்படவில்லை. அவ்வாறு அமுல்ப்படாத நிலை இஸ்ரேலின் விட்டுக்கொடுப்பின்மையாலே ஏற்பட்டது. அமெரிக்க ஜனாபதிபதி தேர்தலை வைத்துக்கொண்டு இஸ்ரேலை அமெரிக்கா பாதுகாக்க நினைத்தாலும் மறுவளமான பிரச்சினைகளை வெள்ளைமாளிகை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால், இவ்வாறு எதனையும் மேற்கொள்ளாது இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை ரத்துச்செய்தமை ஹமாஸ் போன்ற அமைப்பின் தாக்குதலை எதிர்பார்த்திருப்பதுடன், அதிகரிப்பதன் வாயிலான பயங்கரவாதத்தை சுலோகமாகப் பயன்படுத்தி உலக ஆதிக்கத்தை சாத்தியப்படுத்தலாம் என்பதாகும்.

பயங்கரவாதம் என்பது அமெரிக்க மேலாதிக்க கொள்கையை விஸ்தரிப்பதற்கு அமெரிக்காவுக்கு கிடைத்த புதிய ஆயுதமாகும். அதனால், பயங்கரவாதத்தை பயன்படுத்தி முழு உலகத்தையும் கட்டுப்படுத்தும். அரசியலை அமெரிக்கா மேலும் தொடர விரும்புகிறது. அதுமட்டுமன்றி, மேற்காசிய அரசியலில் அமெரிக்காவுக்கு மிக நீண்டகால நெருக்கமும், உறவும் காணப்படுகிறது. அதனால், அமெரிக்காவின் அணுகுமுறை அவ்வாறு அமையுமாயின் உலக அரசியலை இலகுவாகவும், சாத்தியமான வழிகளிலும் பின்பற்றமுடியும்.

எனவே, பயங்கரவாதத்தை அழிக்கும் அரசாக அமெரிக்கா இல்லாது, மீண்டும் பயங்கரவாதத்தை தீவிரமாக பரப்பவும், பலத்தை அதிகரிக்கவும் விரும்புகின்ற நாடாக அமெரிக்கா விளங்குகிறது.

உள்நாட்டு அரசியல்... கனக நமநாதன்

# ஜனநாயகம் என்ற போர்வையில் இனப்பிரச்சினைத் தீர்வு இழுத்தடிப்பு

ஜனநாயகப்பண்பு என்பது பெரும்பான்மையினரின் தலைகளை எண்ணுவதில் தங்கவில்லை. பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை எந்தக் குறைபாடுகளுமின்றி வாழுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை, செயற்பாடுகளை செய்வதேயாகும். சிறுபான்மையினரின் உரிமைகளை, தேவைகளை மதிப்பளித்து எற்றுக்கொள்வதிலேயே ஜனநாயகம் தங்கியிருக்கிறது. அவர்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாடுகளுக்கு கைகொடுத்து உதவுவதிலேயே ஜனநாயகப் பண்புகளை ஒரு நாடு, அரசு கொண்டிருக்கிறது என வெளிக்காட்டலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் என்று பலரும் வாயாறப் பேசுவதெல்லாம் பெரும்பான்மையினரின் எண்ணப்படி நடப்பதை அங்கீகரிக்கும் கோட்பாட்டையே, பெரும்பான்மையினர் கைகளை உயர்த்தியதால், சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்போது, ஜனநாயகம் செயற்படுகின்றது என்று அர்த்தம் கொடுக்கின்றார்கள்.

இவ்வகையான 'ஜனநாயகம்' என்ற சொற்பிரயோகத்தை பயன்படுத்திக்கொண்டு, எத்தனையோ தமிழர் விரோத சட்டங்களை மாறிமாறி வந்த அரசுகள் உருவாக்கியுள்ளது.

இப்போது பேச்சுவார்த்தை என்ற கட்டம் வந்திருக்கும்போது, எல்லாத்தரப்பினரிடமும் பேசவேண்டும் என்ற கருத்தை தென்னிலங்கை பேரினவாதக் கட்சி முன்வைத்து, அது அவர்களின் ஜனநாயக உரிமை என்கிறது. ஜனநாயகம் என்ற கோட்பாட்டை தமது பிழையான செயல்களுக்கு வெளிக்காட்டி மக்களைத் திசைதிருப்ப முனைகின்றார்கள்.

சாதாரண நிலைமையில் ஒரு பிரச்சினை உருவெடுக்குமாயின் பலரும்கூடி ஆராய்ந்து தெளிவை முடிவெடுக்கலாம். ஆனால் போராட்டம், புரட்சி என்கிற ஒரு நிலை ஏற்படும்போது, அந்தப் புரட்சியை போராட்டத்தை வழிநடத்தியவர்களோடுதான் பேசித் தீர்வை எட்ட வேண்டும். ஒரு தொழிற்சங்கம் வேலை நிறுத்தம் செய்கின்றதென்றால் பேச்சுவார்த்தை அந்தத் தொழிற்சங்கத்துடன்தான் அரசு மேற்கொள்ளவேண்டும்.

போராட்டம் செய்கின்ற தரப்பினருடனேதான் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமென்பதே ஜனநாயகப் பண்பு. இதற்கு பல முன் உதாரணங்களை விளக்கலாம்.

தமிழரசுக்கட்சியினர் போராட்டங்களை நடத்தியதால்தான் அன்று பண்டாரநாயக்கா அவர்களுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். அதன் பயனே பண்டா - செல்வா ஒப்பந்தம் அப்போதிருந்த தமிழ் காங்கிரஸ் கட்சியினரை பேசுவதற்கு அழைக்கவில்லை

அதேபோன்றுதான் டட்லி - செல்வா ஒப்பந்தம் தமிழரசுக்கட்சியினருடன் மட்டும் பேசிஎடுக்கப்பட்ட முடிவு.

ஜே.ஆரின் காலத்தில் பல ஆயுதக் குழுக்கள் ஆயுதப்போராட்டத்தில் இறங்கியிருந்தன. 'திம்பு' பேச்சுவார்த்தையின்போது பங்கு பற்றிய ஆயுதக்குழுக்களோடுதான் பேச்சுக்கள் நடைபெற்றன. போராடியவர்களோடுதான் பேச்சுவார்த்தை என்பதுதான் நியதி. போராடியவர்கள் திருப்பதிப்படாத எந்த பேச்சுவார்த்தை முடிவுகளும் நடைமுறைப்படுத்த முடியாதவை என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கவேண்டும்.

மேலும், உதாரணங்களைக் கூறவேண்டுமானால் 1989 இல் பிரேமதாஸா, விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தினார். மற்றைய ஆயுதக்குழுக்கள் 1987 ஆம் ஆண்டிற்குப் பின் பேராட்டத்தில் ஈடுபடாததால் அவற்றினைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை

பின் சந்திரிகா 1994 ஆம் ஆண்டிலும் யுத்தம் செய்துகொண்டிருந்த விடுதலைப் புலிகளுடனேயே பேச்சுவார்த்தை நடத்தினார். இதையே அண்மையில் ரணில் விக்கிரமசிங்காவும் கடைப்பிடித்தார். இது தான் நடைமுறை யதார்த்தம்.

பிரச்சினை இவ்வாறு இருக்கையில் சந்திரிகாவின் புதிய கூட்டு மற்றைய தமிழ்த் தரப்புக்களையும், சிங்களத் தரப்புக்களையும் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற வைக்க வேண்டும் என்பது பிரச்சினையை சிக்கலாக்கி இழுத்தடிப்புச் செய்வதற்கேயன்றி, வேறு எந்தக் காரணத்துக்குமாக அல்ல. இந்தப் புதுமுயற்சி ஜே.வி.பியினரின் உந்துதலினால் ஏற்பட்டதாகவே கருதப்படுகிறது.

யுத்தம் ஒன்று இருபதுக்கும் மேலான ஆண்டுகளாக நடைபெற்றதென்பதை எவரும் மறந்த விடலாகாது. தற்போது தற்காலிக யுத்தநிறுத்தமே கடைப்பிடிக்கப்படுகின்றது. மீண்டும் யுத்தம் வெடிப்பதும் அல்லது சமாதானத்தில் மிதப்பதும், பேச்சுவார்த்தையிலேயே தங்கியுள்ளதென்பதை எவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

இவ்வகையான முக்கியமான பேச்சுவார்த்தைகளை ஜனநாயகப் பண்பு என்று கணித்து பலரையும் உட்படுத்தி சிக்கலாக்கி காலத்தை இழுத்தடிப்பது பொறுமையை சோதிப்பதாகவும் அமையலாம்.

இன்றுள்ள போர் நிறுத்தம் இரு தரப்பினருக்கிடையேயாகும். ஒன்று இலங்கை அரசு மற்றையது தமிழீழ விடுதலைப் புலிகள். வேறுயாரும் போர்நிறுத்தத்தில் பங்கு கொள்ளவில்லை. போரை நிறுத்தியவர்கள் பேச்சுக்களைத் தொடரலாம். 3 ஆம் பேர்வழிகள் தங்களின் தலைகளை நுழைக்கத் தேவையில்லை.

ஜனநாயகம் என்ற போர்வையில் தேவையற்ற கும்பல்கள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றவைத்து குழப்புவதற்கு சந்தர்ப்பங்களை உருவாக்க முனைவதே இந்த ஜனநாயகம் என்ற தந்திரம்.

சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு எல்லாம் பிரச்சினையை இழுத்தடிப்பு செய்வதற்கும் தீர்வற்ற நிலைமைக்கு மீண்டும் இட்டுச்செல்வதற்கு மாத்திரமே வழிவகுக்கும்.

ஈ.பி.டி.பி யினர் தாங்களும் பங்குபற்ற வேண்டுமென்ற கோரிக்கை எதுவித அடிப்படையுமில்லாதது.

அவர்கள் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக கூறும் யோசனைகள் விடுதலைப்புலிகள் முன்வைத்திருக்கும் தீர்வு யோசனைகளிலும் எந்த வகையிலும் கூடியதுமில்லை, மாறுபட்டதுமில்லை.

"மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி" என்பதைத்தான் விடுதலைப் புலிகளும் வலியுறுத்தும் கொள்கையாகும். ஆனால், விடுதலைப் புலிகள் இதற்கு மேலும் ஒரு நிலைமையை அதாவது, சுயநிர்ணயமுள்ள சுயாட்சி என்று அழுத்தி நிற்கின்றார்கள். இந்த நிலைமையில் ஈ.பி.டி.பியினர் என்ன புதுக்கருத்துக்களை பேச்சுவார்த்தையில் முன்போடமுடியும்.

சிங்கள பேரினவாதம் காட்டும் சைகையில் இயங்குகின்ற தமிழ் தரப்பினர் பிரச்சினையை மேலும் சிக்கலடையச் செய்வதற்கும் குழம்பிய குட்டையில் இலாபகரமாக மீன்களைப் பிடிப்பதற்குமாகவே.

இராணுவ சமபலம் பெற்று, அதன் காரணமாகவே பேச்சுவார்த்தைக்கு தகுதியைக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு ஜனநாயக அரசியல் பலம் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது.

தமிழ் மக்கள் இதன் உண்மைத் தன்மையை உணர்ந்து வாக்குகளை பிரயோகிக்கவேண்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அமரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பட்டங்களும், கௌரவங்களும்

யாழ்.பல்கலைக்கழகம் இவ்வாண்டு இரு பெரும் கலைஞர்களுக்கு - அவர்கள் அமரர்களான பின்னர் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி தனக்குப் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளது.

அவர்கள் இருவருமே உயிருடனிருக்கும் காலத்திலேயே இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருக்கப்படவேண்டியவர்கள். ஆனால், பல்கலைக்கழகம் காலம் கடந்த பின்னரே அவர்களின் பெருமையையும், தகைமையையும் புரிந்து கொண்டுள்ளது.

தாம் வாழ்ந்த காலத்திலேயே அவர்கள் தங்கள் மண்ணின் மக்களால் ஒப்பற்ற வியத்தகு கலைஞர்களாக மதிக்கப்பட்டவர்கள். எத்தனையோ தடவைகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவர்கள்.

வைரமுத்து என்று பெயர் கூடச்சொல்லவேண்டியதில்லை. நடிகமணி என்று குறிப்பிட்டால் போதும் அது வைரமுத்து அவர்களைக் குறிக்கும். தனித்துவமிக்க கலைத்துவ பட்டமாக இருந்தது, இன்னமும் இருக்கிறது. அது மக்கள் அவர் வாழும் போதே வழங்கிய உன்னதமான கௌரவம் எனலாம்.

அதே போன்று நாதஸ்வரகான கலாநிதி என்.கே. பத்மநாதன் அவர்களும், தான் வாழ்ந்த காலத்திலேயே ஏராளமான கௌரவப் பட்டங்களையும், விருதுகளையும் மக்களால் வழங்கி கௌரவிக்கப்பட்ட ஒரு பெருங்கலைஞராவார்.

இந்த மக்கள் கலைஞர்களுக்கான விருதுகளும், பட்டங்களும் அவற்றை வழங்கியவர்களுக்கே கௌரவத்தை அதிகம் அளிப்பனவாகும். அவர்களின் கலைஞர்கள் என்ற அடையாளமே அவர்களுக்கான பெருமிதத்திற்குரிய இணையற்ற பட்டமாக என்றென்றும் நிலைத்திருக்கும் கௌரவமாகும்.

ஒரு தடவை பிரபல சிறுகதை எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களுக்கு இந்திய சாகித்திய (அக்கடமி) மண்டலம் விருதொன்றினை அறிவித்தது குறித்து, அவர் கருத்துத் தெரிவிக்கையில் - எனக்கு விருது வழங்கியதன் மூலம் சாகித்திய மண்டலம் தன்னை கௌரவப்படுத்திக்கொண்டுள்ளது என்று சற்று மிடுக்காகவே கூறியிருந்தார்.

இதனை தற்பெருமையாக அல்லது அகங்காரமாக சிலர் கருதலாம். ஆனால், அழுத்தமான ஆத்மார்த்தமான கலையாற்றல் அல்லது படைப்பாற்றல் திறன் மிக்க ஆளுமையைப் புரிந்து கொள்ளுவோமேயானால் அது குறித்து விமர்சிக்கவோ, விசனப்படவோ வேண்டியதில்லை.

கலைஞன் கலைஞனாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இந்த சுயநம்பிக்கையுடன் கூடிய கம்பீர வார்த்தைகள் அவசியமே.

'சொல்லடி சிவசக்தி என்னை சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்' என தான் வணங்கும் தெய்வத்திடமே தன்னைப் பற்றிக் கூறும் கர்வம் மிக்க ஆளுமை பாரதியாரிடம் பொங்கிப்பிரவகிக்க இதுவே காரணம். அதனால் தான் பாரதி என்றால் மகாகவி என்ற சொல் அவரோடு ஒட்டி இணைந்து கொள்கிறது.

எந்தப் பல்கலைக்கழகமும் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்காவிட்டாலும் பல கலாநிதிகள் அவரை ஆய்வு செய்தே அந்தப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டமையை குறிப்பிட்டேயாகவேண்டும்.

ஆனாலும் கூட பல்கலைக்கழகங்கள் ஒரு தனிமனிதனுக்கு அவனது ஆற்றல், திறமை, சமூகத்திற்கான கலை, இலக்கியம் மற்றும் துறைசார்ந்த விடயங்களில் அவன் பதித்துள்ள அடையாளத்துக்காக கௌரவப்பட்டங்களை வழங்கும் மரபினை யாரும் நிராகரிப்பதில்லை.

ஆனால், அவை காலம் கடந்து வழங்கப்படும்போது தான் அதற்கான பெறுமதியை, அதற்குரிய அந்தஸ்தை எட்டாது போய்விடுகிறது.

நமது பல்கலைக்கழகத்தின் பார்வையில் எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்த எத்தனையோ அற்புதமான கலைஞர்கள், சிந்தனையாளர்கள், துறைசார் வல்லுநர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களாக தென்படாது போனது துயரம் தரும் விடயமே.

லயஞான குபேரபூபதி தெட்சணாமூர்த்தி , தனித்துவமான சிந்தனையாளரும் ஓவியருமான சிரித்திரன் சுந்தர், ஓவிய ஞானி மாற்கு, எழுத்தாளர் டானியல், கலை ஞானி போன்ற பலரை நாம் குறிப்பிடமுடியும். இவர்கள் வாழும் போதே பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டியவர்கள். மறைந்த பின்னராவது கௌரவிக்கப்பட்டிருக்கலாமே.

இவர்களின் இடங்கள் இன்னமும் எவராலும் இட்டுநிரப்பப்பட முடியாத வெற்றிடங்களாக இருப்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஏற்கனவே, கடந்த காலங்களில் இத்தகைய கௌரவப் பட்டமளிப்பு விடயமாக மல்லிகை ஜீவாவுக்கு ஏற்பட்ட அவமதிப்பு தொடர்பான சர்ச்சைகளின் பின்னராவது பல்கலைக்கழகம் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவேண்டும். தனிமனிதனுடனான கருத்து முரண்பாடுகளின் அடிப்படையில் அவனது ஆற்றல் மற்றும் ஆளுமையை மதிப்பீடு செய்து கௌரவிக்க முயல்வது தவறான அணுகுமுறையாகும்.

அது மட்டுமல்ல மறைந்த மேதைத்துவம் கௌரவிக்கப்படவேண்டிய அதேசமயம் வாழும் மேதைத்துவம் போற்றப்படவேண்டும். அதற்கு அர்த்தம் அதிகமுண்டு. பல்கலைக்கழகம் இது குறித்து சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

காலம் கடந்தாவது நடிகமணியும், நாதஸ்வர ஜோதியும் பல்கலைக்கழகத்தால் இனங்காணப்பட்டு கௌரவிக்கப்பட்டதற்கு அந்த நிர்வாகத்திற்கு நன்றி...

இந்த வகையில், விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம் வாழும்போதே மேதைத்துவம் மிக்க பல கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவித்ததை பல்கலைக்கழகம் முன்மாதிரியாக கொள்வது நல்லது.

# நாடும் நடப்பும்

செய்தி :- தேர்தல் நிலைமையை ஆராய இலங்கை ஊடகத்துறை அமைச்சர் கதிர்காமர் திக்விஜயம்.




# றோகண குமார படுகொலையின் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா

தென்னிலங்கையின் பிரபல ஊடகவியலாளர் றோகண குமார படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இயங்கியிருப்பதாக பிரான்சின் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரபல சிங்கள வார இதழான 'சட்டன' சஞ்சிகையின் செய்தி ஆசிரியர் றோகண குமார படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி உண்மை நிலை உலகிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி தொடர்பான ஊழல் மோசடி விவகாரம் ஒன்றை அம்பலப்படுத்திய காரணத்தாலேயே றோகண குமார படுகொலை செய்யப்பட்டடதாகவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரியும் உயரதிகாரிகள் றோகண குமாரவை கொலை செய்யும்படி உத்தரவிட்டிருந்ததாகவும் தெரிவித்திருக்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு ஜனாதிபதியின் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவினரே றோகண குமாரவை கொலை செய்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை, உலகின் பலம் வாய்ந்த அமைப்பாக விளங்கும் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டு அர்த்தமற்றது என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாச பீரிஸ் மறுத்துள்ளார்.

**பொலிஸ் மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பு**

# ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபருக்கு நீதிமன்றத்தால் உத்தரவுக் கடிதம்

பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் அவரை பொலிஸ் மா அதிபராக நியமித்தமை குறித்து தாக்கல் செயயப்பட்ட வழக்குத் தொடர்பாக ஜனாதிபதிக்கும், காவல்துறை மா அதிபருக்குமான நீதிமன்ற உத்தரவுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான இந்த முறைப்பாடு முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் சீ.ரி.ஜன்ஸ் மற்றும் ஏனைய 9 பேரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டில், பொலிஸ் மா அதிபர் தனது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதியால் பதவிக்காலம் நீடிக்கப்படுவதற்குப் பதிலாக, மீளவும் பதவி வழங்கப்பட்டதாகவும், அரசியலமைப்புச் சபையின் ஆலோசனை பெறப்படாமல், தனது அதிகாரத்திற்கு மீறிய வகையில் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தன்னிச்சையான நடவடிக்கையே இது எனவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பொலிஸ் மா அதிபரின் பதவியை செல்லுபடியற்றதாக்குவதோடு, பொலிஸாரின் அதிகாரங்களை பொறுப்பேற்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரை பணிக்குமாறும் வழக்குத்தாக்கல் செய்த சீ.ரி.ஜன்ஸ் மற்றும் ஏனைய 9 பேரும் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் அரசியல் அமைப்பின்படி காவல்துறை தொடர்பான முடிவுகளை தன்னிச்சையாக எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## திகாமடுல்ல ஐக்கிய முன்னணியின் மக்கள் பணிமனை நொருக்கப்பட்டது

கடந்த புதன்கிழமை நிந்தவூர் பிரதான வீதியில் பேரியல் அஷ்ரப்பினால் திறந்துவைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் திகாமடுல்ல மாவட்ட மக்கள் பணிமனை (தேர்தல் கிளை) கடந்த வியாழன் இரவு இனந்தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

இந்தக்கிளையின் மூட்டப்பட்ட பலகையினாலான கதவுகளும் உடைக்கப்பட்டு அலுவலகத்தில் உள்ளிருந்த கதிரைகளும் அடித்து நொருக்கப்பட்டன.

இந்த அலுவலகம் தாக்கி சேதப்படுத்தப்பட்டது தொடர்பாக கல்முனைப் பொலிசாரிடம் முறையிடப்பட்டதை அடுத்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டுவருகன்றனர்.

இதேவேளை கடந்த சனிமுதல் இநத அலுவலகம் திருத்தியமைக்கப்பட்டு மீள இயங்கத் தொடங்கியுள்ளது. (07)

## கொழும்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது!

கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மோனகுருசாமி ஆகியோர் சுடப்பட்ட சம்பவங்கள் குறித்து உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது எந்தவகையிலும் அனுமதிக்கமுடியாது எனத் தெரிவித்த பொலிஸ் மா அதிபர் இதற்காக பாதுகாப்பை பன்மடங்காக அதிகரிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல்; பின்னணியில் ஐக்கியதேசியக் கட்சி

**ஜனாதிபதி குற்றச்சாட்டு**

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னால் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக்கட்சி தெரிவிக்கையில் -நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெல்வதென்பது வெளிப்படையாகத் தெரிந்த நிலையில் ஜனாதிபதி இவ்வாறான கதையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் - கடந்த சில வாரங்களாக அர்த்தமற்ற வகையில் சில கதைகளைச்சொல்லி வருகின்றீர்கள். அதைப்போலவே இதுவும் ஆதாரமற்ற கதையாகும்.

அத்துடன் உமது கணவர் இறந்ததற்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணமென தற்போது நீங்கள் தெரிவிக்கின்றீர்கள் ஆனால், இதற்கு முதல் உங்கள் கணவரைக் கொன்றது ஜே.வி.பியினர்தான் எனவும், அதற்கான ஆதாரம் உள்ளதெனவும் பல முறை தெரிவித்திருந்தீர்கள்.

ஆனால, தற்போது ஐக்கிய தேசியக்கட்சி மீது தேவையற்ற விதத்தில் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றீர்கள். அவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சிதான் உங்கள் கணவரைக் கொலை செய்தது என்று சொன்னால் அதற்கான ஆதாரத்தை தேர்தலுக்குமுன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடுமாறு கேட்டுக கொள்கின்றேன் என அமைச்சர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# காலம் எதிர்பார்த்த காலத்தை உங்கள் கைகளில் தருகிறது தேர்தல்

விடுதலை மீது எமக்கிருக்கும் விருப்பையும்,
சமாதானத்தின் மீது எமக்கிருக்கும் ஆவலையும்,
எம் மண்ணில் எமக்கான வாழ்வின் தேவையையும்
வாக்களிப்பு மூலமும் உலகுக்குச் சொல்ல முடியும்.

கொடுத்த விலைக்கும்,
கொட்டிய குருதிக்கும்
ஈடான நிரந்தரத் தீர்வு வேண்டுமென
சிங்கள அரசுகளுக்கும் சொல்ல முடியும்.

**02.04.2004 அன்று**
**ஈழத்தமிழரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியும்**

எனவே ஈழத் தமிழ்த்தேசியத்தை ஏற்றுக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெற வீட்டுச் சின்னத்திற்கே வாக்களிப்பீர்.



வீட்டுக்குப் போடும் புள்ளடி
விடுதலை நோக்கிய முதலடி


சுரேஸ் பிரேமச்சந்திரன்
(1)


ஸ்ரீகாந்தா
(2)


சிவாஜிலிங்கம்
(3)


சிவநேசன்
(4)


கஜேந்திரகுமார்
(5)


ரவிராஜ்
(6)


பத்மினி சிதம்பரநாதன்
(7)


சிவமகாராஜா
(8)


சீ.வீ.கே.சிவஞானம்
(9)


கஜேந்திரன்
(10)


சூ.சிறில்
(11)


மாவை.சேனாதிராஜா
(12)

# இரு பிரிட்டன் பிரஜைகள் ஈராக்கில் சுட்டுக்கொலை!

ஈராக்கின் வடபகுதி நகரான மொசூலில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் இரு பிரிட்டன் பிரஜைகள் கொல்லப்பட்டதாக ஈராக்கிய பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சக்தி நிலையம் ஒன்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையில் கார் ஒன்றில் வந்த முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக இராணுவ அதிகாரி முகமட் மகுட் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பத்திரிகைத் தகவல்களே இதுவரை தமக்கு கிடைத்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

உலக நோக்கு

# 325 தொகுதிகளில் சமாஜவாதிக் கட்சி தனித்துப்போட்டியிடும் என்கிறார் மாயாவதி!

பகுஜன் சமாஜ்வாதி 325 தொகுதிகளில் தனித்து போட்டியிடும் என்று அந்தக்கட்சியின் தலைவி மாயாவதி அறிவித்துள்ளார்.

கொல்கத்தா நகரில் நேற்றுமுன் தினம் பகுஜன் சமாஜ் கட்சியின் பேரணி நடைபெற்றது. இதில் மாயாவதி கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது -

நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய அளவிலோ அல்லது மாநில அளவிலோ பகுஜன சமாஜ்வாதி எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ளாது. தனியாக 325 தொகுதிகளில் போட்டியிடும்.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் எங்களுக்குத் துரோகம் செய்துவிட்டது. காங்கிரஸார் மட்டும் எங்களுக்கு ஒழுங்காக வாக்களித்திருந்தால் நாங்கள் மேலும் 100 இடங்களில் வெற்றி பெற்றிருப்போம்.

தேர்தல் முடிந்த பிறகு ஏற்படும் சூழ்நிலையைப் பொறுத்து யாருடன் உறவு வைத்துக்கொள்வது என்பது குறித்து பகுஜன் சமாஜ்வாதி ஆலோசித்து முடிவு செய்யும்

கூட்டணி கட்சிகள் கூட்டணி தர்மத்தை மதித்துச் செயற்படாவிட்டால் கூட்டணி அமைப்பதில் பயன் இல்லையென மாயாவதி தெரிவித்தார்.

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

2004.03.19 ஆம் திகதி புளியங்குளத்திலிருந்து முகமாலை நோக்கி வந்த பேருந்தில் கோப்பி கலர் கோட், மூக்குக் கண்ணாடியும் சிகப்பு நிற தினக் குறிப்பேடும் அடையாள அட்டை (463553246V) 2500/= பணமும் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தந்துதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

# ஒலியின் வேகத்தைவிட செல்லக்கூடிய விமானம்; நாஸா விண்வெளி ஆய்வுமையத்தால் பரிசோதனை!




ஒலியின் வேகத்திலும் 7 மடங்கு வேகத்தில் செல்லும் ஆற்றல் மிக்க விமானத்தை பரிசோதித்துவருவதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா தெரிவித்துள்ளது.

ஸ்கிராம் ஜெட் என அழைக்கப்படும் எஞ்சின்கள் எக்ஷ் 43 ஏ என அழைக்கப்படும் விமானத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த விமானங்களில் ஐதரசன் வாயு எரிபொருளாகப் பாவிக்கப்படுகின்றன. விமானத்தின் வேகம் ஒரு நிலையை அடையும் வரை விமானத்தில் எடுத்துச்செல்லப்படும் ஒட்சிசன் வாயு ஐதரசன் வாயுவுடன் எரிவதன் மூலம் சக்தி பிரமிக்கப்படும். பின்னர் வளியில் உள்ள ஒட்சிசனை உயர் அழுத்தத்தில் உறிஞ்சி ஒலியை விட 7 மடங்கு வேகத்தை பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையான ஜெட் என்ஜின்கள் எதிர்காலத்தில் விண்வெளி விமானங்களிலும் பாவிக்கப்படவுள்ளன. அண்மையில் பரிசோதிக்கப்பட்ட விமானம், 16 நிமிடங்கள் வரை விமானிகள் இல்லாது பிரயாணம் மேற்கொண்டு கடலில் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ரக விமானங்களின் பரிசோதனைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதாக நாசாவின் பேச்சாளர் லெஸ்லி வில்லியம் தெரிவித்தார்.

குறைவான எரிபொருள் செலவில் கூடுதலான தூரத்திற்கு பிரயாணம் மேற்கொள்வதற்கு புதிய



தொழில் நுட்பம் வழிவகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வழியில் காணப்படும் ஒட்சிசன் தமது சுத்திகரித் தேவைக்கு பயன்படுத்தப்படும்.முதலாவது விமானம் இது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வகையான எக் 43 ஏ விமானம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பரிசோதிக்கப்பட்டு தோல்வியடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு தொடரும்; ம.தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு

ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கான ம.தி.மு.கவின் ஆதரவு தொடாந்து நீடிக்கும். எந்தத் தடை வந்தாலும் பயப்படமாட்டோம் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான அந்தக்கட்சியின் அறிக்கையை கோவையில் கைகோ வெளியிட அதை திருப்பூர் துரைசாமி பெற்றுக் கொண்டார்.

அமெரிக்காவில் உள்ள இந்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைப் போல, தெற்காசியா, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கும் இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான தனது நிலையை இந்தியா மாற்றிக் கொள்ளவேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான அமைதிப் பேச்சுவார்த்தையில் இந்தியாவும் முக்கிய பங்களிக்க வேண்டும்.

இலங்கைக்கு சம்பந்தமே இல்லாத பல நாடுகள் இலங்கையில் காலூன்ற நினைக்கின்றன. எனவே தனது சொந்த பாதுகாப்பைக் கருத்தில் கொண்டாவது, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும்.

சேது சமுத்திரம் திட்டத்தை நிறைவேற்ற இலங்கை முட்டுக் கட்டை போட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற ம.தி.மு.க. பாடுபடும்.

கச்சதீவு அருகே தமிழக மீனவர்களால் மீன்பிடிக்க முடியாத நிலை உள்ளது. கச்சதீவு பகுதியில் மீன் பிடிக்கச் சென்று ஆயிரக்கணக்கான தமிழர்கள் தங்களது இன்னுயிரை ஈர்த்துள்ளனர். எனவே கச்சதீவை மீண்டும் இந்தியாவே கைவசப்படுத்த மத்திய அரசை வற்புறுத்தவோம்.

மாநில அரசுகளைக் கலைக்கும் அரசியல் சட்டத்தின் 356 ஆவது பிரிவை நீக்கவேண்டும். தமிழை மத்தியில் ஆட்சிமொழியாகவும், செமமொழியாகவும் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசுகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.



வர்க்கத்தின் பெருமை ஓங்க உழைத்த இவரை
அதிகப்படியான வாக்குகளால்
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில்
யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்வோம்.
கூட்டுறவாளர்களும்
பொதுமக்களும்.
சி.சிவநேசன்
பொதுமுகாமையாளர்
வடமாகாண ப.தெ.வள
கூட்டுறவு நிறுவங்களின்
சமாசம்.
X 4

ராஜா யாழ்ப்பாணம்.
வசீகரன், பூஜா நடித்த

கண்களால் கைதுசெய்
காட்சி நேரம்:-
10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)
(சி-2263)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், குஷ்பு நடித்த
சேவகன்
காட்சி நேரம் : 11:00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
THE ITTALION JOB
(சி-2262)


யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்-தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்
சொலமன் சூ.சிறில்
X 11
எமது நிலம் எமக்கு வேண்டும் தமிழீழ விடியலை தீர்மானிக்கும் தேர்தல்!
வீட்டுக்குப் போடும் புள்ளடி! விடுதலைக்கு இதுவும் ஒருபடி - தேசிய எழுச்சிப் பேரவை, சண்டிலிப்பாய் பிரதேசம்
(சி-2352)

அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தமிழ் மக்களே!

சிவநேசன் 4

சிறில் 11

சிவமகாராசா 8
உங்களின் வாக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே!
'தேச விடுதலைக்காக கூட்டுறவு துறையினூடாக பலவழிகளிலும் பெரும்பணி ஆற்றிய கூட்டுறவாளர்களை வெற்றிபெறச் செய்வோம்'
இலங்கைத் தமிழரசுக் கட்சி X
(சி/2349)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கூட்டுறவாளர் சமூகம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கவிதை நூல் வெளியீட்டுவிழா




நோர்வேயில் வாழும் ஈழக்கவிஞர் சோதியாவின் உயிர் விதைப்பு கவிதை நூல் வெளியிட்டு விழா இன்று மாலை 3.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் பொ.ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை வளநாடனும், சிறப்புரையை தமிழன்பனும், நூல் வெளியீட்டு உரையினை புலிகளின் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் மதிப்பீட்டுரையை சோ.பத்மநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார் என யாழ்.கலை இலக்கிய வட்டம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டுக்கு...

தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 31 ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறுவதற்காக யு.எஸ்.503 விமானத்தில் எஸ்.அமரசிங்க என்ற பெயரில் பயண அனுமதிச்சீட்டை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சி தமது கட்சி மீது களங்கம் ஏற்படுத்தவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது. (01)

# தேர்தல் பிரசாரங்கள் நாளை நள்ளிரவுடன் முடிவு

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான அரசியற் கட்சிகளின் பிரசாரப் பணிகள் நாளை நள்ளிரவுடன் முடிவடைகின்றன. தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடைபெறும். இது தொடர்பாக தேர்தல் ஆணையக அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் -

வன்செயல்களற்ற சுதந்திரமான வாக்களிப்புக்கு நாடு தழுவிய ரீதியில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் தேர்தல் தொடர்பான அரசியலமைப்பின் 17 ஆவது விதியை தேர்தல் ஆணையாளர் கண்டிப்பாகப் பயன்படுத்துவார்.

இம்முறை நாடு தழுவிய ரீதியில் 10 600 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 110 000 அரச அலுவலர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் வாக்களிப்பு தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அனுப்பியுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வாக்களிப்பு நிலையங்களில் தேவையற்ற விதத்தில் வன்செயல்கள் நடைபெறுவதை அனுமதிக்கக் கூடாது. நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன், 22 மாவட்டங்களிலுமுள்ள வாக்களிப்பு நிலையங்களில் பலாத்காரமாக வாக்களிக்க முயற்சித்தல், வாக்குப் பெட்டிகளை பறிமுதல் செய்தல், மக்களை வாக்களிக்கவிடாமல் தடுத்தல் அல்லது வாக்குகளைச் சிதைத்தல் போன்ற நடவடிக்கைகளில் யாராவது ஈடுபட முயற்சித்தால் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள பொலிஸாருக்குத் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

இம்முறை 12,899,032 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். இந்த வாக்காளர்களில் இம்முறை 470 270 பேர் புதிதாக இணைந்துள்ளனர். 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான இந்த வாக்களிப்பில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதில் 196 பேர் தேர்தல் மூலமும் 29 பேர் தேசிய பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் அனைவரும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தமது வாக்குகளை அளிக்கவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

24 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளும், 192 சுயேட்சைக் குழுக்களுமாக மொத்தம் 5 698 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்குள் 286 பௌத்த பிக்குகளும் அடங்குவர். இவர்கள் 20 மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர்,

அத்துடன், 23 பெண்கள் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் போட்டியிடுகின்றனர். கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான நவ சமாஜக் கட்சி மட்டும் 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றது.

10 600 வாக்களிப்பு நிலையங்கள் நாடு தழுவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ளன.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில், இந்த வாக்களிப்பு நிலையங்களில் 610 இம்முறை கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இதேவேளை, வாக்களிப்பு நிலையங்களில் அனேகமானவை பாடசாலைகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இம்முறை பௌத்த பிக்குகள் கூடுதலாகத் தேர்தலில் போட்டியிடுவதனால், வாக்களிப்பு நிலையங்கள் எதுவும் பௌத்த விகாரைகளில் அமைக்கப்படவில்லை.

வாக்களிப்பு முடிவடைந்ததும் வாக்கு எண்ணும் பணிகள் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குப் பின்னர் ஆரம்பமாகும். முதலாவது தேர்தல் முடிவு அன்றைய தினம் நள்ளிரவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பிய ஒன்றியத்...

பிரசாரப் பணிகளில் ஈடுபடவேண்டும். முக்கியமாக மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

இதற்கு அவர்களுக்கு சகல சுதந்திரமும் வழங்கப்படவேண்டும்.

நாம் சோதனைச் சாவடிகள் தொடர்பாகவும், இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வெளியே உள்ள மக்கள் வாக்களிப்பது தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடியுள்ளோம்.

தேர்தல் தொடர்பான முரண்பாடுகள் சில நேற்று முன்தினம் ஏற்பட்டன. தற்போது நிலைமை சிறிது சிக்கலாக உள்ளது. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், மட்டக்களப்பு அரச அதிபர் ஆகியோருக்கு ஏற்பட்ட தேர்தல் வன்முறை கண்டிக்கத்தக்கது.

இது ஜனநாயகத்திற்கு இழுக்கான செயல், ஜனநாயகத்துக்கு சவாலான செயல். இவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும்.

இலங்கையில் 1980 வரை ஜனநாயகம் மதிக்கப்பட்டது. ஆனால் தற்போது இரண்டு சகாப்த காலமாக ஜனநாயகம் மீறப்பட்டுவருகிறது.

எமது குழு தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரும், தேர்தல் நடைபெற்ற பின்னரும் நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பது தொடர்பான அறிக்கையொன்றை தேர்தல் முடிவடைந்தவுடன் வெளியிடும்.

முக்கியமாக தேர்தல் நடைபெற்ற பின்னர் நடைபெறக்கூடிய வன்செயல்கள் தொடர்பாகவும் எமது குழு ஆராயும்.

நான் மக்களுக்கு கூறவிரும்புவது - தமது வாக்குகளை முழுமையாக பயன்படுத்தி அச்சம் இன்றி வாக்களிக்க முன்வரவேண்டும். மனித சுதந்திரத்துடன் இயல்பாக வாக்களிக்கவேண்டும்.

சென்ற முறை தேர்தல் தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பித்து இருந்தோம். அந்த அறிக்கை தொடர்பாக எந்த செயற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.

அறிக்கையின் செயற்பாடு தொடர்பாக தேர்தல் ஆணையாளர் அக்கறை கொண்டிருந்தும் செயற்படுத்தும் அதிகாரம், நாடாளுமன்றத்துக்கு இருக்கின்றமையால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

குறிப்பாக மக்கள் எம்மை அழைத்ததன்பேரில்தான் நாம் இங்கு வந்து இம்முறையும் தேர்தல் தொடர்பான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்போம். அந்த அறிக்கையில், தகுந்த முறையில் செயற்படுத்தப்படவில்லை என்றால், அடுத்து வரும் தேர்தலில் நாம் கண்காணிப்பாளராக வருவோமா என்பது தொடா பாக ஆராயவேண்டும்.

நாம் நேற்றையதினம் தேர்தல் தொடர்பாக இராணுவத்தளபதி, பிரதி பொலிஸ் அதிகாரி, யாழ். மாவட்ட முக்கிய கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி உட்பட 4 கட்சிகளைசந்தித்து கலந்துரையாடினோம். குறிப்பாக இலங்கையில் சிறந்தமுறையில் ஜனநாயகம் உருவாகவேண்டும் என்றால் ஒரு கட்சி சார்ந்தவர் தவறிழைக்கும் போது அதை அந்தக் கட்சியே தண்டிக்கும் நிலை வரும்போதுதான் ஜனநாயகம் சிறப்பாக குடிகொள்ளும் என- ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு குழுத் தலைவர் தெரிவித்தார். (தீ)

## மீன் முள்ளு...

ஆனாலும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் நேற்று மரணடைந்தார். இவரது சடலம் வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்படவுள்ளது.

## வல்லைவெளி...

எனினும் அங்கு கூடிய மக்களின் கடும் எதிர்ப்பையடுத்து அவர்கள் அங்கிருந்து வல்லைவெளி வரை விரட்டப்பட்டனர்.

இதேவேளை - இதற்கு முன்னர் வல்வெட்டித்துறையில் இவர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டவேளை, அந்தப்பகுதி மக்களுக்கும் சுயேட்சைக் குழு வேட்பாளர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (202)

# மூன்று கொலை முயற்சி சம்பவங்கள்
## ஜனாதிபதி சந்திரிகா கண்டனம்

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் உட்பட மூவரைக் கொலை செய்வதற்கு நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து தாம் கவலையும் அதிர்ச்சியும் அடைந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

அத்துடன் இந்தக் கொலை முயற்சி சம்பவங்களை ஜனாதிபதி வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இத்தகைய கொலை முயற்சிகள் நீதியும், நேர்மையுமான தேர்தலை நடத்துவதற்கு இடையூறாக அமையும்,

அரச அதிகாரி ஒருவர் பீதியும், அச்சுறுத்தலும் இன்றி தமது கடமையைச் சுதந்திரமாகச் செயற்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டியது மிகவும் அவசியம் என்றும், ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக பாதுகாப்பு...

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நிறுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதனால், தற்போது நான் வீட்டிலேயே உள்ளேன். இவ்வாறு இருந்தபோதிலும் எனது ஆதரவாளர்கள் எனக்கு சார்பாக பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கருணாவின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்தாலும் - ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறும் தேர்தலில் நான் வெற்றிபெறுவது உறுதி எனவும் தெரிவித்தார்.

அத்துடன்- தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தான் விலகிக் கொண்டிருப்பதாக செய்யப்படும் பிரசாரம் உண்மையில்லை என்றும் மக்களிடம் தேர்தல் பிரசாரம் செய்ய முடியாத நிலையில் உள்ளபோதும் மக்கள் தன்மீது கொண்டுள்ள நம்பிக்கை காரணமாக தேர்தலில் தான் போட்டியிடப்போவதாகவும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

## பலத்த....

தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர், பிள்ளையாரடிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் மாலை சுடப்பட்டதாக மட்டக்களப்பு பிரதேசத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை- இந்த சம்வத்தையடுத்து, மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.







இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.